விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 308 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 06 திங்கட்கிழமை (23.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## தனியார் வசமாகிறதா ஸ்ரீ லங்கா ரெலிகொம்?

### கிளர்ந்தெழத் தயாராகிறது ஊழியர் சங்கம்

(கொழும்பு)
ஸ்ரீ லங்கா தொலைத் தொடர்பு நிறுவனத்தை (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்) தனியார் நிறுவனத்திற்கு விற்பனை செய்வதற்காக அதன் சொத்துப் பெறுமதியைக் கணக்கிடும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கைத் தொலைத்தொடர்பு ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு நிறுவனமொன்றினால் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப் படுவதாக சங்கத்தின் தலைவர் ஜகத் குருசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் 15

## மின்கட்டண அதிகரிப்பை மக்களால் தாங்க முடியாது

### ஒப்புக்கொள்கிறது அரசாங்கம்

(கொழும்பு)
தற்போதைய மின்கட்டண உயர்வை பொதுமக்களால் தாங்குவது கடினம் என்பதை அரசாங்கம் ஒப்புக்கொள்வதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

எனினும், தற்போது பல நாடுகளுக்கு இடையே நிலவும் போர்ச்சூழல் காரணமாக, இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலை அதிகரித்துள்ளது. இந்த துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையில் மின் கட்டணத்தை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டமை வருந்தத்தக்கது என வும் அவர் தெரிவித்துள்ளார். 15

## பேக்கரி உற்பத்திகளின் விலை அதிகரிக்காது

(கொழும்பு)
பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகளில் எந்தவித மாற்றமும் ஏற்படுத்தப்பட மாட்டாது என சங்கத்தின் தலைவர் என்.கே. ஜயவர்தன தெரிவித் 15

## கசிப்புடன் ஒருவர் கைது


(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் பலாலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலிட்டி வடக்கு பகுதியில் 120 லீற்றர் கசிப்புடனும், 800 லீற்றர் கோடாவுடனும் நேற்று ஞாயிற் 15

## கேந்திர நிலையமாக மன்னார்

# இந்தியாவிலிருந்து மன்னார் ஊடாக மின்சாரம்

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

- இந்தியா - மன்னார் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படும்.
- இந்தியா - இலங்கை இடையே மன்னார் ஊடாக மின்சாரம்.
- அனைவருக்கும் சமவுரிமை வழங்குவதே எம் நோக்கம்.



இந்தியா - இலங்கைக்கான கேந்திர மத்திய நிலையமாக மன்னாரை மாற்றவுள்ளோம். மன்னாரினூடாக இந்தியாவில் இருந்து இலங்கைக்கு மின்சாரம் எடுத்துவரப்படவுள்ளது.

மன்னாரை மையமாக கொண்டு பாரிய அபிவிருத்திச் திட்டங்களை முன்னெடுக்கவும் நாம் தயாராகி விட்டோம் என ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். 02

## ஜனாதிபதித் தேர்தலில் இரட்டை நிலைப்பாட்டில் ஆளும் தரப்பு

### தீர்வு காண ஜனாதிபதி ரணில் முனைப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் தொடர்பில் ஆளும் கட்சிக்குள் மேலோங்கியுள்ள கருத்து முரண்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ் வாரத்தில் ஆளும் கட்சி கூட்டத்தை கூட்டி அடுத்த ஆண்டு உத்தேசிக்கப்படுகின்ற தேர்தல்கள் குறித்து முக்கிய தீர்மானங்களை 15

## கடல் சீற்றம் குறித்து

### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டைச் சூழவுள்ள கடற்பிராந்தியங்களில் பலத்த காற்றுடனான வானிலை நிலவும் எனவும் கடல் சீற்றத்துடன் காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனவே கடலில் நெடு நாள் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் 15

### பாராளுமன்ற உறுப்பினர்களின்

## ஒழுக்கக்கோவை வரைவு இன்று அமைச்சரவைக்கு

(கொழும்பு)
பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் முறையாக நடந்து கொள்ளாவிட்டால் அதனை எதிர்கொள்ளும் அதிகாரம் வழங்கும் வரைவு அமைச்சரவையின் ஒப்புதலுக்காக இன்று சமர்ப்பிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் சபா நாயகர் கரு ஜயசூரிய 15

## சரத் வீரசேகர, பிரசன்ன ரணதுங்கவுக்கு விசா வழங்க அமெரிக்கா மீண்டும் மறுப்பு



(கொழும்பு)
அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர ஆகியோருக்கு அமெரிக்கா செல்வதற்கான விசா மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் துறை கண்காணிப்புக் குழுவின் தலைவர்களின் செயல 15





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகில் நடக்கும் யுத்தங்களால் இலங்கையின் பொருளாதாரம் நலிவுறும்

## பொருளியலாளர்கள் எச்சரிக்கை

காசாவில் இடம்பெறும் மோதலும், யுக்ரைன் யுத்தமும் இலங்கையின் பொருளாதாரத்திற்குப் பாரிய பாதிப்பு ஏற்படுத்தியுள்ளதாகப் பெரருளியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி ஆரம்பமான இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலும் ஒரு வருடத்துக்கு மேலாக நீடிக்கும் ரஷ்ய - யுக்ரைன் போரும் உலகப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துள்ளது.

அத்துடன் இலங்கை எதிர்கொண்ட மோசமான பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு முயற்சித்து வரும் நிலையில் குறித்த இரண்டு யுத்தங்களும் அதில் பாரிய தாக்கத்தை செலுத்தியுள்ளதாகப் பொருளியலாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (ந-7)



யாழ் வருகை தந்துள்ள ஊருவரிகே வன்னில அத்தோ தலைமையிலான ஆதிவாசிகள் நேற்று நயினாதீவு நாக விகாரைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். (7)

### கிளிநொச்சியில்

# புலிகளின் தங்கம் தேடிய அகழ்வுகள் இடைநிறுத்தம்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினால் தங்கம் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கிளிநொச்சி - திருநகர் பகுதியில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கிளிநொச்சி திருநகர் பகுதியில் தனியார் காணி ஒன்றில் புதையல் இருப்பதாக கூறி கடந்த 20.10.2023 அன்று அகழ்வு பணிகள் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற அனுமதியுடன் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், தொல் பொருள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகியோர் முன்னிலையில் குறித்த அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில், அகழ்வு பணி இடம் பெற்ற இடத்தில் எந்த சான்று பொருட்களும் காணப்படாத காரணத்தினால் கிளிநொச்சி நீதி மன்ற நீதவான் துபராகினி ஜெகநாதன் அகழ்வு பணியை நிறுத்துமாறு கூறியுள்ளார்

நேற்று முற்பகல் 9 மணி முதல் குறித்த அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் ஜெ.சுபராஜினி முன்னிலையில் அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டிருந்த போதும் எந்தவித பொருட்களும் காணப்படாத நிலையில் அகழ்வு பணிகள் கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (7,104)


**ஒப்பந்த வேலைகள்**

உங்கள் கட்டிடங்களுக்கான சட்டறிங் வேலைகள், கூரை வேலைகள், லெவல் சீற் வேலைகள் மற்றும் பெயின்ரிங் வேலைகள் தரமாக செய்து பெற்றுக் கொள்ளலாம்.

(C-7475)

**076 288 4366**


# இந்தியா...

மன்னார், முசலி தேசிய பாடசாலை விளையாட்டரங்கில் நேற்று முற்பகல் இடம்பெற்ற தேசிய மீலாதுன் நபி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி,

இந்தப் பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

குறிப்பாக, மன்னார் மாவட்டத்தில் வீதிகள் அமைப்பது தொடர்பில் தொடர்ந்தும் கலந்துரையாடி வருகின்றோம்.

குறிப்பாக, இப்பிரதேசத்தில் வீடுகளை நிர்மாணிப்பது போல கல்வியும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

மன்னார் நகரில் கல்வி நன்றாக உள்ளது. ஆனால் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள கல்வி நிலையில் திருப்தியடைய முடியாது.

அத்துடன், இப்பிரதேசத்தில் பாரிய அபிவிருத்தி குறித்தும் திட்டமிட்டுள்ளோம். இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையில் கடல் போக்குவரத்து சேவையை ஏற்படுத்துவதற்கான பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனை காங்கேசன்துறையில் ஆரம்பித்தோம் அடுத்து தலைமன்னாரில் ஆரம்பிக்கவுள்ளோம். அதேநேரம் இந்தியாவும் இலங்கையும் இணைந்து மின்சார அமைப்பை உருவாக்க திட்டமிட்டுள்ளன. அது மன்னார் ஊடாக நடக்கவுள்ளது என்பதை நான் கூற விரும்புகிறேன்.

இது வெறும் ஆரம்பம்தான். இதன் மூலம் எதிர்காலத்தில் மன்னார் அபிவிருத்தி அடையும். குறிப்பாக இந்த பகுதியில் பசுமை பொருளாதாரம் மற்றும் பசுமை ஆற்றலுக்கு அதிக சாத்தியம் உள்ளது. இங்கு கிடைக்கும் சூரிய சக்தியை கொண்டு இப்பகுதியை மேம்படுத்த முடியும். புத்தளத்திலிருந்து மன்னார் வரை யாழ். குடாநாட்டின் ஊடாக முல்லைத்தீவு வரை அந்த வாய்ப்புள்ளது.

மேலும் மன்னாரை சுற்றுலா மையமாக மாற்ற நாங்கள் விரும்புகிறோம். அதேநேரம் மீன்பிடி தொழில் வளர்ச்சி அடையும்போது மன்னாருக்கு புதிய பொருளாதாரம் கிடைக்கும்.

அனைத்து மதங்களையும் சமமாக நடத்துவதே எங்கள் கொள்கை.

மேலும் அனைவருக்கும் சம உரிமை வழங்குவதே எங்கள் நோக்கம். நான் திவாலான நாட்டைக் கைப்பற்றினேன். அந்த திவால் நிலையில் இருந்து மீண்டு வருகிறோம். எனவே, அந்த பணியை முறையாக மேற்கொள்ளவுள்ளோம்.

அனைத்து மதத்தினரையும் சமமாக நடத்துவதும், ஒவ்வொரு குடிமகனுக்கும் சம உரிமை வழங்குவதும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாகும்.

இஸ்ரேல் - ஹமாஸ் மோதலில் பலஸ்தீன மக்களை பலிகடா ஆக்குவதை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், அந்த பிரதேசங்களில் மோதல்களை தடுத்து அமைதியை நிலைநாட்ட ஐ.நா. பொதுச் செயலாளரின் வேலைத்திட்டத்துக்கு முழு ஆதரவு வழங்குவதாகவும் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார். (7)


**கம்சப்பிரியா இசைக்கல்லூரி**

**24.10.2023 விஜயதசமி நாள் வகுப்புகள்**
**ஆரம்பம்:(மாலை 3.00 - 4.00 மணிவரை நடைபெறும்)**
**புதிய மாணவர்கள் இணைந்து கொள்ளலாம்.**

- வீணை
- புல்லாங்குழல்
- வயலின்
- ஹார்மோனியம்
- கிற்றார்
- வாய்ப்பாட்டு
- ஓர்கன்

(17466)

ஆசிரியர்
**077 481 9795**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378**
**076 097 3127**

**கிழவன்காடு கலாமன்றம்**

காரைநகர் யாழ்கிளை

**விஜயதசமி நாள் வகுப்பும் புதிய அனுமதியும் - 2023**

மேற்படி கலாமன்றத்தில் நடைபெற்றுவரும் பின்வரும் கலை வகுப்புகளுக்கான நாள் வகுப்பும் புதிய மாணவர்களுக்கான அனுமதியும் விஜயதசமி நாளாகிய (24.10.2023) ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 5.00 மணியளவில் நடைபெறவுள்ளதால் அதில் இணைய விரும்பும் மாணவர்கள் அனுமதியினை அன்றைய தினம் பெற்றுக்கொள்ள முடியும். பின்னர் அனுமதிகள் வழங்க முடியாத நிலையுள்ளதால் குறித்த நாளில் அனுமதியினை பெற்று ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றோம்.

**நடைபெறும் கலை வகுப்புகள்**

- அறநெறி
- பண்ணிசை
- சங்கீதம்
- நடனம்
- மிருதங்கம்
- வயலின்
- வீணை
- ஓகன்
- சித்திரம்

பதிவாளர்
காரைநகர்

பதிவாளர்
யாழ்கிளை
இல. 428, கே.கே.எஸ் வீதி
(வண்ணை சிவன் கோவில் அருகாமை யாழ்ப்பாணம்)
077 578 6338

(C-7472)

**காணி விற்பனைக்கு உண்டு**

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 24 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- இரண்டு இரண்டு பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வீடு கட்டுவதற்கும் களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் நல்ல சூழல்.
- நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- யாழ் பஸ் நிலையம் 3 1/2 கிலோ மீற்றர் தூரம்.
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/=)
- A-9 வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்
- நன்னீர் ஊற்று.
- தரகர் தேவையில்லை

தொடர்பு
**077 623 4204**
**076 755 8606**
**077 076 0389**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சீர்திருத்தங்கள் அவசியம்; எனினும் காணாமல் போன மாகாணசபைத் தேர்தலும் புதைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலும் முக்கியம்

## முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர்

**(கொழும்பு)**

**அரசாங்கத்தின் உத்தேச தேர்தல் சீர்திருத்தங்களை வரவேற்றுள்ள முன்னாள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய முன்னர் கைவிடப்பட்டுள்ள தேர்தல்களை நடத்தவேண்டும் என தெரிவித்துள்ளார்.**



தேர்தல் சட்டங்களில் பாரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி ஒன்பது பேர் கொண்ட குழுவை நியமித்துள்ளமை குறித்து கருத்து தெரிவித்துள்ள மகிந்த தேசப் பிரிய ஆறுமாதங்களில் தனக்கு வழங்கப்பட்டுள்ள பணியை ஆணைக்குழு பூர்த்தி செய்வது மிகவும் கடினம்,பல மணித்தியாலங்கள் பல நாட்கள் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களில் ஈடுபடவேண்டியிருக்கும் ஒரு வருட காலத்திற்கு கூட இது நீடிக்கலாம்.

சீர்திருத்தங்கள் வரவேற்கத்தக்கவை. அவை இந்த காலத்தின் தேவை எனினும் இவற்றிற்கு முன்னர் எங்களிற்கு காணாமல்போன மாகாண சபை தேர்தலும் புதைக்கப்பட்ட உள்ளூராட்சி சபை தேர்தலும் அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## வன்னிப் போருடன் காசா போரை ஒப்பிடுவது தவறு-சரத்வீரசேகர

(கொழும்பு)

இஸ்ரேல் பக்கம் நிற்கும் மேற்குலகமே இலங்கைமீது போர்க்குற்றங்களை சுமத்தி வருகின்றன என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஹமாஸ் அமைப்பை பயங்கரவாதிகள் எனக் கூறி காசா யுத்தத்தில் இன்று இஸ்ரேல் பக்கம் நிற்கும் மேற்குலக நாடுகள் அன்று ஈழப்போரில் விடுதலைப் புலிகளுக்காக முன் நின்றன.

தலைவர் பிரபாகரனை காப்பாற்றிக் கொள்வதற்காக அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் முயற்சித்தன எனவும் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இஸ்ரேல் - பாலஸ்தீன போர் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டுமென வலியுறுத்தி நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வன்னியில் நடைபெற்ற போருடன் காசா போரை ஒப்பிடுவது தவறு.

இன்று ஹமாஸ் அமைப்பை எதிர்க்கும் அமெரிக்க உள்ளிட்ட மேற்குலக நாடுகள் இலங்கை போரில் விடுதலைப் புலிகள் பக்கமே நின்றன

எமது நாட்டை இரண்டாக்குவதற்காகவே விடுதலைப்புலிகள் போரிட்டனர். அந்த போரை நாம் முடிவுக்கு கொண்டு வந்தோம்.

ஹமாஸ் அமைப்பின் நோக்கம் வேறு. விடுதலைப் புலிகள் நோக்கம் வேறு. எனவே , காசா போருடன் இலங்கை போரை ஒப்பிடமுடியாது என அவர் தெரிவித்தார். (நி)


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 1957.04.14
இறப்பு: 2021.10.14

லயன். கலாநிதி.

## தனேந்திரன் நீலாதேவி



வேலணைப் பெருங்குளத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட லயன்.கலாநிதி. தனேந்திரன் நீலாதேவி (லயன்லேடி) அவர்கள் மரணித்து இன்று இரண்டாவது ஆண்டு நினைவுநாளாகும். அவரது பிள்ளைகள் இருவர். ஒருவர் கனடாவிலும், இன்னொருவர் தற்பொழுது இலங்கையிலும் வசித்து வருகின்றனர். இவர் கணவரோடு இணைந்து பலவிதமான சமூகப் பணிகளையும் முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்கி வாழ்ந்த தாயின் ஆத்மா சாந்தி பெற உற்றார், உறவினர், குடும்பத்தினர் அனைவரும் பெருங்குளத்து அம்மனை வேண்டி நிற்கின்றார்கள்.

67/2 சீனிவாசகம் வீதி
கொட்டடி ,யாழ்ப்பாணம்,

(17552)

தகவல்
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நெருப்பாக ஹோலி; சிறப்பாக இந்தியா



## நியூஸிலாந்தின் போராட்டம் வீணானது

உலக கிண்ணத் தொடரில் இந்திய அணியின் ஆதிக்கம் நீடிக்கிறது. நேற்றைய லீக் போட்டியில் 4 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. மீண்டும் 'சேஸ்' மன்னனாக ஜொலித்த ஹோலி, 95 ஓட்டங்கள் விளாசினார். 'வேகத்தில்' மிரட்டிய ஷமி 5 விக்கெட்டுக்களைச் சாய்த்தார். நியூசிலாந்து தரப்பில் டேரில் மிட்சலின் அபார சதம் வீணானது.'

இந்தியாவில் உலக கிண்ண (50 ஓவர்) கிரிக்கெட் தொடரின் 13வது சீசன் நடக்கிறது.

தரம்சாலாவில் நடந்த 21ஆவது லீக் போட்டியில் இந்திய - நியூசிலாந்து அணிகள் மோதின.

நியூசிலாந்து அணிக்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. மொஹமட் சிராஜ் பந்தில் டேவன் கான்வே 'டக்-அவுட்' ஆனார். ஷமி 'வேகத்தில்' வில் யங் (17) போல்டானார். பின் இணைந்த ரச்சின் ரவிந்திரா - டேரில் மிட்செல் ஜோடி இந்திய பந்துவீச்சை எளிதாக சமாளித்து ஆடியது. குல்தீப் யாதவ் வீசிய 19ஆவது ஓவரில் ரச்சின், மிட்செல் தலா ஒரு சிக்சர் விளாச 16 ஓட்டங்கள் கிடைத்தது. பொறுப்பாக ஆடிய ரச்சின், ஒருநாள் அரங்கில் தனது 3ஆவது அரைச் சதத்தை பதிவு செய்தார். இவருக்கு ஒத்துழைப்பு கொடுத்த மிட்செல், ஜடேஜா, குல்தீப் பந்தில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்டார். மூன்றாவது விக்கெட்டுக்காக 159 ஓட்டங்கள் சேர்த்த போது ஷமி பந்தில் ரச்சின் (75) ஆட்டமிழந்தார்.



அணித் தலைவர் ரொம் லதாம் (5) ஏமாற்றினார். அபாரமாக ஆடிய மிட்செல், ஒருநாள் அரங்கில் தனது 5ஆவது சதம் விளாசினார். சிராஜ் பந்தில் ஒரு சிக்சர் அடித்த பிலிப்ஸ் (23), குல்தீப் பந்தில் ஆட்டமிழந்தார். பும்ரா பந்தில் மார்க் சாப்மேன் (6) ஆட்டமிழந்தார். ஷமி வீசிய 48வது ஓவரின் 4, 5வது பந்தில் சான்ட்னர் (1), மாட் ஹென்றி (0) ஆட்டமிழந்தனர். அடுத்த பந்தை பெர்குசன் தடுத்தாட, ஷமியின் 'ஹட்ரிக்' வாய்ப்பு நழுவியது.

ஷமி வீசிய கடைசி ஓவரில் வரிசையாக ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த மிட்செல் (130), 5ஆவது பந்தில் ஆட்டமிழந்தார். கடைசி பந்தில் பெர்குசன் (1) 'ரன்அவுட்' ஆனார்.

நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 273 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் ஷமி 54 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

சவாலான இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு அணித் தலைவர் ரோகித் சர்மா (46), சுப்மன் கில் (26) ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. ஸ்ரேயாஸ் ஐயர் (33), லோகேஷ் ராகுல் (27) ஓரளவு கைகொடுத்தனர். அபாரமாக ஆடிய விராட் ஹோலி அரைச்சதம் கடந்தார். சூர்யகுமார் யாதவ் (2) 'ரன்-அவுட்' ஆனார்.

பின் இணைந்த ஹோலி - ரவிந்திர ஜடேஜா ஜோடி நம்பிக்கை அளித்தது. பெர்குசன் வீசிய 36ஆவது ஓவரில் 2 பவுண்டரி விரட்டிய ஜடேஜா, ரச்சின் பந்தை சிக்சருக்கு அனுப்பினார். போல்ட் வீசிய 47வது ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்து அசத்தினார்.

எனினும் 95 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து மற்றுமொரு சத வாய்ப்பை நழுவவிட்டார். ஹென்றி பந்தை பவுண்டரிக்கு விரட்டிய ஜடேஜா வெற்றியை உறுதி செய்தார். இந்திய அணி 48 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 274 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. ஜடேஜா (39), ஷமி (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர். இவ்வெற்றி மூலம் 5வது வெற்றியை பதிவு செய்த இந்தியா, 10 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறியது. ஆட்ட நாயகன் விருதை ஷமி வென்றார்.(7)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்கட்டண அதிகரிப்பை எதிர்த்து தீப்பந்தங்களுடன் வீதிக்கிறங்கிய மக்கள்



(கண்டி)

மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளனர்.

இந்தநிலையில், நேற்று முன்தினம் இரவு பாணந்துறை - ஹொரன வீதியில் ஒன்றுதிரண்ட மக்கள் மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, கைகளில் தீப்பந்தங் களை ஏந்தியிருந்ததுடன், தங்களது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

மக்கள் போராட்ட இயக்கத்தினரின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது. இதேவேளை, மின்கட்டண அதிகரிப்பிற்கு எதிராக கண்டியிலும் பொது மக்கள் தங்களது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தியுள்ளனர். இரவு வேளையில் தீப்பந்தங்களுடன் வீதிக்கு இறங்கிய மக்கள் மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர். (நி)

# பல கோடி பெறுமதியிலான ஹெரோயின் மீட்பு

## நடுக்கடலில் வைத்து ஐவர் கைது

(கொழும்பு)

200 கிலோகிராமிற்கும் அதிகளவிலான ஹெரோயின் போதைப்பொருட்களுடன் 5 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகம் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது குறித்த போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த போதைப்பொருட்களின் பெறுமதி 4,000 மில்லியன் ரூபா என இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த கடத்தல் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பணியகமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (நி)


# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி. ஜெயதர்சினி திலீபன் அவர்களின் தந்தையார்

அமரர். திரு. கந்தையா கந்தசாமி

அவர்கள் இறைபதம் அடைந்து விட்டார்.
அவருடைய குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.


பாடசாலைச் சமூகம், யா/சிறுப்பிட்டி அ.த.க. பாடசாலை. (17553)

# 31 ஆம் நாளில் நினைவு கூருகின்றோம்

எமது பாடசாலையின் அதிபர்
திரு.வீ.சிவாகரன் அவர்களின்
அன்புத் தந்தை
அமரர். அரியகுட்டி வீரசிங்கம்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவு நாளில்
அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன்
அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

(17522) ஓம் சாந்தி சாந்தி சாந்தி



ஆசிரியர்கள்,
யா/சங்குவேலி அ.த.க. பாடசாலை.


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர். திரு. செல்வராஜா ரமேஷ்
(உள்ளூராட்சி உதவியாளர் (LGA) ,JP)

மண்ணுலகில் — 05.05.1969
விண்ணுலகில் — 01.11.2022

திதி :- ஐப்பசி அபரபட்ச அட்டமி - 22.10.2023

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்
உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"



ஓராண்டென்ன எத்தனை ஆண்டுகள்
கடந்தாலும் தங்களின் வழிகாட்டுதல்களும்,
எங்களுடன் நீங்கள் சேர்ந்து வாழ்ந்த
நினைவுகளும் எப்பொழுதுமே இருக்கும்.

"ஹேமா இல்லம்"
சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு,
மானிப்பாய் (17530)

உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.


# இராசிபலன்

23.10.2023
ஐப்பசி 06, திங்கட்கிழமை
நவமி பிற்பகல் 3.30 மணிவரை

திருவோணம் பிற்பகல் 3.45 மணிவரை
சுபநேரம் 12.02-1.32 மணிவரை
இராகுகாலம் 7.32-9.02 மணிவரை

சந்திராஷ்டமம்-புநர்பூசம், பூசம்
மகா நவமி விரதம்

வளவன்

**மேஷம்** — பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**ரிஷபம்** — அரைகுறையாக இருந்த காரியங்களை நிறைவேற்றும் எண்ணம் உருவாகும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** — உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, வரவைக் காட்டிலும் செலவு அதிகரிக்கலாம், கவலைகள் தீர அம்பிகையை வழிபட வேண்டிய நாள்.

**கடகம்** — நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு கிடைக்கும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும்.

**சிம்மம்** — மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், சுப காரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** — மனநிறைவு கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நீண்ட நாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள்.

**துலாம்** — கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், செய்தொழிலில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்** — சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ் கூடும், பயணங்களால் பலனுண்டு, வளர்ச்சி கூடும் நாள்.

**தனுசு** — குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மகரம்** — ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆரம்பத்தில் அச்சுறுத்தலாக தோன்றிய காரியம் முடிவில் ஆதாயத்தைக் கொடுக்கும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** — சாப்பிடக்கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், பிரபல மானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள்.

**மீனம்** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.

அறியாமையின் குழந்தை தான் தப்பான அபிப்பிராயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயிரம் மாணவர்களுக்கு இலவச கணனிக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கல்வித் தரத்தை மேம்படுத்தி "மீண்டும் கல்வியில் முத லிடம்" என்ற இலக்கை எட்டும் நோக்கில் My Dream Academy தனது பயணத்தை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

இக்கற்கைநெறிகளை யாழ் மாவட்டத்தில் வழங் குவதற்காக அங்கஜன் இராமநாதனின் "என் கனவு யாழ்" அறக்கட்டளையுடன் பாராளுமன்ற உறுப்பினர் தம்பிக்க பெரேராவினது டிபி எடியுகேசன் அறக்கட்ட ளையும் கைகோர்த்துள்ளது.

இதன் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேச செயலக பிரிவுகளுக்கு உட்பட்ட சுமார் 1200 மாணவர்கள் வரு டாந்தம் பயன் பெறும் வகையில் மாவட்டத்தின் முதலாவது My Dream Academy ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் கல்வியில் முத லிடம் என்ற எமது இலக்கை நோக்கிய பயணத்தின் மிக முக்கியமான தடமாக, யாழ் மாவட்ட மாணவர்களை தொழில்நுட்பத் துறையில் தேர்ச்சியடைந்தவர்களாக உருவாக்கி அதனூடாக சர் வதேச தொழில்வாய்ப்பு களை ஏற்படுத்திக் கொடு க்கும் வகையில் இது செய ற்படவுள்ளது. (நி-33)

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில்

# கதிர்காமக் கந்தனின் திருவுருவச் சிலை பிரதிஷ்டை

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வள்ளி-தெய்வானை சமேத கதிர்காமக் கந்தனின் திருவுருவச்சிலை பிரதிஷ்டை நிகழ்வு நாளை 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு, கூட்டுத் தாபன வளாகத்தில் நடைபெற வுள்ளதாக, இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச்சேவைப் பணிப்பாளர் இரத்தினசிங்கம் கணபதிப் பிள்ளை தெரிவித்துள்ளார்.


இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் வழி காட்டலில் பொறியியலாளர் சண்.குகவரதன் மற்றும் எம்.டி. எல். குணரத்ன ஆகியோரின் பங்குபற்றுதலுடன் குறித்த நிகழ்வு இடம்பெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)

# கல்வியை இடைநிறுத்திய மாணவர்களை மீளவும் இணைக்க நடவடிக்கை

(சாவகச்சேரி)

பூநகரிப் பிரதேச செயலக சிறுவர் நன்நடத்தைப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து கடந்த வியாழக் கிழமை பூநகரிப் பிரதேசத்தில் பாடசாலைகளில் இருந்து இடை விலகிய மாணவர்களை மீளவும் பாடசாலைகளில் இணைப்பதற்கான நடவடிக் கைகளை முன்னெடுத்திருந்த னர்.

இதன்போது பாடசாலை ளுக்கு சென்று இடைவிலகிய மாணவர்களின் தரவுகளை பெற்றுக்கொண்டு-முழங்கா வில் பொலிஸாரின் ஒத்துழை ப்புடன் மாணவர்களுடைய வீடுகளுக்குச் சென்று அவர்க ளுடைய வீட்டு நிலைமை தொடர்பாக ஆரா ய்ந்ததுடன்-உரிய தொண்டு அமைப்புக் களின் உதவியுடன் மீளவும் அவர்கள் பாடசாலைக் கல்வி யைத் தொடர்வதற்கான வாய்ப் பினை ஏற்படுத்திக் கொடுத்து ள்ளனர். (நி-30)



நவராத்திரி விழாவினை முன் னிட்டு மீசாலை, சைனிங் ஸ்டார் லேணிங் முன் பள்ளி மாணவர் களிடையே கோலம் போடும் போட்டி அண்மை யில் இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

# ஐப்பசி மாத இராசி பலன்கள் 18.10.2023-16.11.2023

## தனுசு

**எதையும் திட்டமிட்டுச் செய்து வெற்றி காணும் தனுசு இராசி வாசர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். மேலும் குடும்ப ஸ்தானத்தில் இருக்கும் சனி வக்கிரம் பெற்றிருக்கின்றார். எண்ணங்கள் எளிதில் நிறைவேறு வதில் இடையூறுகள் அதிகரிக்கும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற இய லாது. பொருளாதாரப் பற்றாக்குறையும் புதிய கடன் சுமையும் வரலாம். தொழில் உத்தியோகத்தில் மிகவும் கவனமாக இருப்பது நல்லது.

**சனி வக்கிர நிவர்த்தி**

ஐப்பசி 8 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியா கின்றார். உங்கள் இராசிக்கு 2, 3 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் வக்கிர நிவர்த்தியாகிப் பலம் பெறுவதால் நிறைய நன்மைகள் உங்க ளுக்கு கிடைக்க வேண்டும். ஆயினும் குடும்பச் சனியின் ஆதிக்கமாக இருப்ப தால் குடும்பத்தில் சில குழப்பங்க ளையும் உருவாக்கலாம். கொடுக்கல்-வாங்கல்களில் ஏமாற்றங்களைச் சந்தி க்க நேரிடும். விலை உயர்ந்த பொரு ட்களை விற்கக்கூடிய சூழ்நிலை ஒரு சிலருக்கு உருவாகும். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு அதி கார வர்க்கத்தினரோடு மனக்கசப்பு ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகா ரிகள் உங்களுக்கு வரவேண்டிய பதவி உயர்வை தாமதப்படுத்தலாம்.

**குரு வக்கிரம்**

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியிலேயே வக்கிரம் பெற்றுச் சஞ்சரிக்கின்றார். உங்கள் இராசிக்கும் 4 ஆம் இடத்திற்கும் அதிபதியானவர் குரு. அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. இராசிநாதன் வக்கிரம் பெறும் பொழுது நினைத்தது நிறைவே றாமல் போகலாம். நல்ல சந்தர்ப்பங்கள் நழுவிச்செல்லும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத விரயங்களை சந்திக்க நேரிடும். குரு விற்குரிய வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

**நீச்சம் பெறும் சுக்கிரன்**

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் குருவிற்கு பகை கிரகமானவர் சுக்கிரன். அவர் நீச்சம் பெறுவது நன்மைதான். எதிர்பாராத விதத்தில் சில நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். உத்தியோகத்தில் உங்கள் கருத்துகளை மேலதிகாரிகள் ஏற்றுக் கொள்வர். வீடு, வாகனம் வாங்க கடன் உதவி கேட்டு விண்ணப்பித்திருந்தால் அது கைகூடும்.

**விருச்சிக புதன்**

ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசி க்கு புதன் வருகின்றார். உங்கள் இராசி க்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியா னவர் புதன். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் மறைவிடத்திற்கு வரும் பொழுது நல்லதைச் செய்யும் என்பார்கள். மறைந்த புதனால் நிறைந்த தனலாபம் கிடைக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும். கல்யா ணக் கனவுகள் நனவாகும். கடமையைச் செவ்வனே செய்து பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் அதிகாரிகளின் நட்பால் நன்மை உண்டு. கலைஞர்களுக்கு முன்னேற்றம் ஏற்படும். மாணவ-மாண வியர்களுக்கு ஆசிரியர்களின் ஆதரவும் பெற்றோர்களின் அன்பும் கிடைக்கும். பெண்களுக்குப் பொருளாதார நிலை உயரும். புனிதப் பயணங்கள் அதிகரி க்கும். எதிர்காலத்தைப் பற்றிய பயம் அகலும். இல்லத்தில் நல்லது நடக்கும்.

## மகரம்

**வெள்ளை உள்ளமும் விடாப்பிடியான குணமும் கொண்ட மகர இராசி வாச கர்களே!**

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆரா ய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொட க்கத்தில் உங்கள் இராசிநாதன் சனியும் அர்த்தாஷ்டம குருவும் வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார்கள். அஷ்டமாதிபதி சூரியன் நீச்சம் பெற்றுவிட்டார். எனவே நன்மை யும் தீமையும் கலந்தே நடைபெறும் மாதமிது. இராசிநாதன் வக்கிரம் பெறுவ தால் ஆரோக்கியத் தொல்லை ஏற்படலாம். ஆயினும் ஆகாரக் கட்டுப்பாட்டின் மூலம் அதை சரி செய்து கொண்டு செயற்படு வீர்கள். துணிவும் தன்னம்பிக்கையும் இம் மாதம் உங்களுக்குத் துணையாக இருக்கும்.

**சனி வக்கிர நிவர்த்தி**

ஐப்பசி 6 ஆம் திகதி மகர இராசியில் சஞ்சரிக்கும் சனி வக்கிர நிவர்த்தியா கின்றார். உங்கள் இராசிக்கு அதிபதி வக்கிர நிவர்த்தியாவது யோகம் தான். எனவே உடல்நலம் சீராகி உற்சாகத்துடன் பணி புரியும் சூழ்நிலை ஏற்படும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையக்கூடிய நேரமிது. பொன், பொருள் சேர்க்கை, பூமி யோகம் போன்றவைகள் உண்டு.

அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக் கும். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு புதிய பங்குதாரர்கள் வந்திணைவர். அரைகுறையாக நின்ற பணிகள் அனை த்தும் துரிதமாக நடைபெறும். எதையும் திட்டமிட்டுச் செய்து வெற்றி காணும் நேர மிது. உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்ய ப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேருவர்.

**குரு வக்கிரம்**

மாதம் முழுவதும் குரு பகவான் மேஷ இராசியிலேயே வக்கிரம் பெற்றுச் சஞ்ச ரிக்கின்றார். உங்கள் இராசிக்கு அர்த்தா ஷ்டம குருவாக விளங்குபவர் இப்பொழுது வக்கிரம் பெற்றுச் சஞ்சரிப்பது யோகம் தான். பயணங்கள் பலன் தரும் விதம் அமையும். கண்ணியமிக்க நண்பர்களின் சேர்க்கையால் கடமையைச் சரிவரச் செய் வீர்கள். விரயங்கள் அதிகரித்தாலும் அதற்குரிய வரவு உண்டு. வீடு, இடம் வாங்கும் முயற்சி கைகூடும். பெற்றோர்களின் ஆதரவு திருப்தி தரும். கூட்டு முயற்சியில் இருந்து விலகி தனித்து இயங்கலாமா என்று சிந்திப்பீர்கள்.

**நீச்சம் பெறும் சுக்கிரன்**

ஐப்பசி 16 ஆம் திகதி கன்னி இராசிக்கு சுக்கிரன் வருகின்றார். அங்கு அவர் வலிமை இழந்து நீச்சம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்க ளுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் நீச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளால் சில பிரச்சினைகளும் விரயங்களும் ஏற்படும். தொழில் கூட்டா ளிகள் இணக்கமாக நடந்து கொள்ள மாட்டார்கள். பூர்வீக சொத்துப் பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். மனப்பயம் அதிகரிக்கும்.

**விருச்சிக புதன்**


ஐப்பசி 17 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு புதன் வருகின்றார். உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் லாப ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் நல்ல நேரம் தான். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொடர்ந்து வந்த கடன் சுமை குறையும். உற்றார், உறவி னர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர். உத்தியோ கத்தில் உயர்வு வருவதற்கான அறி குறிகள் தென்படும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்குப் பொறுப்புகள் அதிகரிக்கும். வியாபாரம், தொழில் செய்பவர்களுக்கு புதிய கூட்டா ளிகள் வந்திணைவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு தடைப்பட்ட பதவி உயர்வு தானாக வரலாம். கலைஞர் களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். மாணவ-மாணவியர்களுக்கு படிப்பில் தேர்ச்சி பெறும் வாய்ப்பு உண்டு. பெண் களுக்குப் பிரச்சினைகள் படிப்படியாகத் தீரும். கொடுக்கல் - வாங்கல்களில் சரள நிலை ஏற்படும். பிள்ளைகளின் சுபகாரி யப் பேச்சுக்கள் கைகூடும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரத்தின் விலை உயரும் அபாயம்

## விவசாய அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

உக்ரைன் -ரஷ்யா யுத்தம், இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் என யுத்தங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் உலக சந்தையில் யூரியா உரம் உட்பட அனைத்து உரங்களின் விலையும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை உரத்துக்கான கேள்வி கோரலை மூன்று மாதங்களாக தாமதப்படுத்திய இரண்டு அதிகாரிகளை விவசாய அமைச்சில் இருந்து உடனடியாக நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த பருவத்தில் விவசாயிகளுக்கு தேவையான யூரியா உரத்தை கூடிய விரைவில் கொள்வனவு செய்வதற்கு விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சரவையின் அங்கீகாரத்தை வழங்கியுள்ளதாகவும் விவசாய அமைச்சின் உரம் தொடர்பான அதிகாரிகளுக்கு உரிய கேள்வி கோரலை அழைக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால் அமைச்சரவை ஒப்புதல் அளித்து மூன்று மாதங்கள் கடந்தும் அதை கையாளும் இரண்டு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும் யூரியா கேள்வி கோருவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரியவந்துள்ளது. (நி)

## மின்கட்டண அதிகரிப்பு

# இலங்கை மக்களின் பொருளாதார நிலைமையை கடுமையாக பாதிக்கும்

## எரிசக்தி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை மக்களின் பொருளாதார நிலைமை கடுமையாக பாதிக்கும் என எரிசக்தி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மின்கட்டண அதிகரிப்பு காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

அதிகரித்துள்ள மின்கட்டணத் தொகையை செலுத்துவதற்கு மக்கள் தமது பொருளாதார நடவடிக்கைகளில் சிலவற்றை மட்டுப்படுத்த வேண்டியிருக்கும் என எரிசக்தி ஆய்வாளர் கலாநிதி விதுர ரலபனாவ தெரிவித்தார்.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு எதிர்காலத்தில் மின்சார பாவனை குறையும் என எரிசக்தி ஆய்வாளர் கலாநிதி விதுர ரலபனாவ தெரிவித்தார்.

இவ்வருடத்தில் மின்கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படும் மூன்றாவது சந்தர்ப்பம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# மின்சாரம் தொடர்பான நட்டத்தினை ஈடு செய்ய துரித நடவடிக்கை அவசியம்

## சர்வதேச நாணயநிதியம் வலியுறுத்து



(கொழும்பு)

மின்சாரக்கட்டணத்தை செலவுகளுக்குப் பொருந்தும் வகையில் பேண வேண்டியது அவசியமான விடயமாகுமென சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதித் தலைவர் கத்ஸ்யரினா ஸ்விரிட்சென்கா வலியுறுத்தியுள்ளார்.

வோஷிங்டனில் நடைபெற்ற நிகழ்நிலை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மின்சாரம் தொடர்பான நட்டத்தினை ஈடுசெய்வதற்கான துரித நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டியது மிகவும் முக்கியமானது என்பதை நாம் வலியுறுத்த விரும்புகின்றோம்.

அவ்வாறு இல்லாது விட்டால் வரிசெலுத்துபவர்கள், சமூகத்தில் ஆபத்தினை எதிர்நோக்கும் தரப்பினருக்கு அது சுமையாக அமைந்து விடும். சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான நிதி உதவித் திட்டங்களிலும் அது முக்கியமானதொரு அங்கமாகும்.

வரிசெலுத்துபவர்களின் மீதான சுமையைக் குறைப்பதற்கு வலு வான சமூகப் பாதுகாப்பொன்றே இருக்க வேண்டும். மின் சாரத் துறையும்செயற்றிறன் மிக்கதாக அமைய வேண்டும். அரசுரீதியான தொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு அமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம் மத்தியகால, நெடுக்காலத்துக்கு ஏற்ற வகையில் மின்சார செலவுகளைகுறைத்துக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் அதிகாரிகள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். ஆகவே அப்பணிகள் கிரமமாக வெற்றி பெறும் என்று எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்தார். (நி)

# வீரசேகர, ரணதுங்க இருவருக்கும் விசா வழங்க மறுத்த அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஆகியோருக்கு அமெரிக்க விசா வழங்குவது கடினம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தால் அமெரிக்காவில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் துறை மேற்பார்வைக் குழுத் தலைவர்களின் பட்டறையில் பங்கேற்க இவர்கள் இருவரது பெயர்களும் பரிந்துரைக்கப்பட்டது.

எனினும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஆகியோருக்கு அமெரிக்க விசா வழங்குவது கடினம் என இராஜதந்திர ரீதியில் பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதனால் அவர்கள் இந்த அமெரிக்க சுற்றுப்பயணத்தில் இருந்து விலகிக் கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 260 | 220 | 250 | 280 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 350 | 350 | 400 | 300 |
| தக்காளி | 220 | 220 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 110 | 160 | 150 |
| கோவா | 200 | 180 | 180 | 200 |
| கரட் | 250 | 320 | 250 | 350 |
| பூசணி | 100 | 70 | 80 | 100 |
| புடோல் | 100 | 240 | 140 | 200 |
| வாழைக்காய் | 200 | 180 | 200 | 300 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 250 | 300 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 120 | 240 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 150 | 160 |
| பயற்றங்காய் | 350 | 380 | 300 | 300 |
| லீக்ஸ் | 200 | 160 | 160 | 200 |
| பீற்றூட் | 140 | 150 | 150 | 200 |
| கறிமிளகாய் | 400 | 300 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 250 | 200 | 200 | 300 |
| போஞ்சி | 450 | 450 | 500 | 500 |
| கத்தரிதம்புள்ள | 220 | 150 | 250 | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 50 | 80 | 100 |
| தேசிக்காய் | 1400 | 1300 | 1400 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 70-100 |
| இராசவள்ளி | 400 | 450 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 350 | 350 | — | 400 |
| முள்ளங்கி | 120 | 140 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 160 | 40 | 60 |
| ஈரப்பலா | 100 | 150 | 80 | 200 |

SINNATHURAI CHILDREN FOUNDATION සින්නත්තුරෙයි ළමා පදනම சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம்

திருக்குறள் பாவோதல் போட்டி - 2023

சின்னத்துரை குழந்தைகள் நிறுவனம் மற்றும் பனுவல் புக்மார்ட் (Book Mart), வலம்புரி ஊடக அனுசரணையுடன் நடாத்தும் பதினான்கு (14) வயதிற்கு உட்பட்ட மாணவர்களிற்கான திருக்குறள் பாவோதல் போட்டி

மதிப்பிற்குரிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் கற்கை நலன்விரும்பிகள் அனைவருக்கும்

மேற்படி போட்டியில் அனைவரும் ஆர்வத்துடன் கலந்துகொள்ள அன்புடன் அழைக்கின்றோம்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களின் பிரதேச அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் தொகையை அடிப்படையாகக் கொண்டு இடம், காலம், நேரம் முதலானவை வலம்புரி ஊடகம் மூலம் அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவுத் திகதி 01.12.2023 ஆகும்.

வயதெல்லை 7 - 8 வரை : அன்புடைமை, புலால் மறுத்தல் ஆகிய அதிகாரங்களில் இருந்து 05 குறள்கள்.
வயதெல்லை 9 - 10 வரை : விருந்தோம்பல், இனியவை கூறல், கொல்லாமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 06 குறள்கள்.
வயதெல்லை 11 - 12 வரை : செய் நன்றி அறிதல், அடக்கமுடைமை, பயனில சொல்லாமை, ஈகை ஆகிய அதிகாரங்களில் இருந்து 08 குறள்கள்.
வயதெல்லை 13 - 14 வரை : கல்வி, வாய்மை, மானம், பெரியாரைப் பிழையாமை, பண்புடைமை ஆகிய அதிகாரங்களில் இருந்து 10 குறள்கள்.

குறிப்பு : குறளும் பொருளும் சொல்லும் அழகு, மேடை ஆளுமை, நிலை, உச்சரிப்பு, சீர் உடை அனைத்தும் கவனத்திற்கொண்டு நடுவர்களால் புள்ளி வழங்கப்பட்டு திறமை மிக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களிற்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி கௌரவிக்கப்படுவார்கள்.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி- சி.காண்டீபன் (செயலாளர் - SCF), பனுவல் புக் மார்ட்(Book Mart), இல.12, யாழ் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் அல்லது scfthirukkural@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
2. முகவரி, தொடர்பு இலக்கம், மின்னஞ்சல்
3. பாடசாலையின் பெயர், கல்வி கற்கும் தரம்.
4. பெற்றோர் அல்லது பாதுகாவலர் கையொப்பம்.

தொடர்புகளுக்கு 0767427596

(இ)

தகவல் நிர்வாகம் SCF நிறுவனம், [illegible] Book Mart

ஊடக அனுசரணை "வலம்புரி"


நிர்வாகப் பொறுப்பாளர் SCF தலைவர் - சி.துரைராஜா பதிவு எண் GA3126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## திறக்கப்பட்டது ரஃபா எல்லை

# உதவிப் பொருட்களுடன் காசாவிற்குள் கனரக வாகனங்கள்



(ஜெருசலேம்)

ஹமாஸ்- இஸ்ரேல் இடையிலான போர் 15 ஆவது நாளை கடந்துள்ளது. ஹமாஸ்க்கு பதிலடி கொடுக்கும் வகையில் இஸ்ரேல் காசா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் எகிப்தில் இருந்து காசாவிற்கு செல்லும் ரஃபா பாதை மூடப்பட்டது.

இதன் காரணமாக சுமார் 24 லட்சம் பேர் உணவு மற்றும் மருத்துவ வசதியின்றி தவித்தனர். காசாவின் வடக்குப் பகுதியில் உள்ள மக்களை வெளியேறுமாறு வலியுறுத்திய இஸ்ரேல், தாக்குதலை தொடர்ந்த வண்ணம் இருந்ததால், உதவிப் பொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலை நீடித்தது.

இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சில தினங்களுக்கு முன் இஸ்ரேல் சென்றிருந்தார்.

அப்போது இஸ்ரேல் பிரதமர் நேதன்யாகு உடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

காசா மக்களுக்கு உதவிப் பொருட்களை வழங்க அனுமதிக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அதேபோல், எகிப்து ஜனாதிபதியிடமும் இதுகுறித்து பேசினார்.

பின்னர், உதவிப் பொருட்களை கொண்டு செல்லும் வகையில் இஸ்ரேல் ரஃபா பாதையை அனுமதிக்கும் எனக் கூறியிருந்தார். ஆனால், ரஃபா பாதையில் உள்ள சாலைகள் சேதமடைந்ததால் எப்போது உதவிப் பொருட்கள் செல்லும் என அறிவிக்கப்படாமல் இருந்தது.

இந்த நிலையில் தற்போது எகிப்தில் இருந்து காசாவிற்கு உதவிப் பொருட்களுடன் கனரக வாகனங்கள் ரஃபா பாதை வழியாக சென்று காசாவை அடைந்துள்ளது.

இதன்மூலம் பரிதவித்து வரும் காசா மக்களுக்கு உதவிப் பொருட்கள் விநியோகிக்கப்பட உள்ளது. (நி)

# ஈரானின் தலையை ... இஸ்ரேல்

(டெஹ்ரான்)

**ஈரானின் தலையை நசுக்கவும் இஸ்ரேல் தயார் என... செய்வோம் என இஸ்ரேலின் பொருளாதார அமைச்சரா...**

ஈரானின் அயதுல்லாக்கள் மொத்தமாக துடைத்து நீக்கப்படுவார்கள் எனவும் நிர் பர்கத் சுட்டிக்காட்டியுள்ளார்.

காஸா பகுதியில் எப்போது வேண்டுமானாலும், இஸ்ரேலிய இராணுவம் தரைவழித் தாக்குதலை முன்னெடுக்கலாம் என்ற சூழலில் அவரது ஆவேசமான கருத்துக்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

காஸா எல்லையில் பல்லாயிரக் கணக்கான இஸ்ரேலிய வீரர்கள் நிலைகொண்டுள்ளனர். ஆனால் ஹமாஸ் மற்றும் ஹெஸ்புல்லா ஆகிய இரண்டு முனைகளில் இஸ்ரேல் போரிடத் தள்ளப்படலாம் என்ற அச்சம் அதிகரித்து வருகிறது.

கடந்த வாரம் முழுவதும் லெப...

...னானுடனான இஸ்...லின் வடக்கு எல்லையி... இஸ்ரேல் பாதுகாப்பு பை... மற்றும் ஹெஸ்புல்... அமைப்பு தொடர் தாக்... தலை முன்னெடுத்துள்... னர்.

இந்த நிலையிலே... ஹெஸ்புல்லாவை மட்... மல்ல ஈரானையே மொத...

# நேபாளத்தில் நிலநடுக்கம்


(காத்மண்டு)

நேபாளத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.3 ஆக பதிவாகியுள்ளது என தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்பட்ட பொருளிழப்புகள் உள்ளிட்ட விபரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# அகதிமுகாம் மீது இஸ்ரே... சிறுவர்கள் உட்பட 1...



(ஜெருசலேம்)

இஸ்ரேல் மேற்குகரையின் அகதிமுகாமின் மீது மேற்கொண்ட தாக்குதலில் 13 பேர் கொ...லப்பட்டுள்ளனர்.

நூர் சாம்ஸ் அகதிமுகா...

# கடல்வழிப் போக்குவரத்தை தடுக்க குறிவைத்து தாக்குகிறது சீனா

## பிலிப்பைன்ஸ் குற்றச்சாட்டு

(பிலிப்பைன்ஸ்)

மேற்கு பசுபிக் கடலில், கடல்வழி போக்குவரத்திற்கு மிக அத்தியாவசியமான இடமாக கருதப்படுவது வட சீன கடற்பகுதி.

இந்த கடற்பகுதி வழியாக உலகின் 21 சதவீதத்திற்கும் அதிகமான உலக வர்த்தக கப்பல் போக்குவரத்திற்காக கையாளப்படுவதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

மீன் வளம் அதிகமுள்ள பகுதியாக கருதப்படுவதால் உலகின் 50 சதவீத மீன்பிடி கப்பல்கள் இங்கு நிலை நிறுத்தப்படுவது வழக்கம்.

இந்த வட சீனகடல் பகுதியில் இரண்டாம் தாமஸ் ஷோல் (shoal) எனும் நீர்மட்டம் குறைவான கடல் பகுதி உள்ளது. இப்பகுதி மீது சீனாவும் பிலிப்பைன்ஸூம் உரிமை கொண்டாடுவதால் சர்ச்சைக்குரிய பகுதியாக கருதப்படுகிறது.

பிலிப்பைன்ஸ் இப்பகுதியில் தன் நாட்டு கப்பல்களை நிலைநிறுத்தும். இக்கப்பல்களுக்கு மாதாந்திர அத்தியாவசிய பொருட்கள் சிறிய படகுகளில் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து கொண்டு செல்லப்படுகிறது.

இந்நிலையில், இரு வெவ்வேறு சம்பவங்களில் பிலிப்பைன்ஸிற்கு சொந்தமான ஒரு சரக்கு விநியோக படகின் மீதும் ஒரு கடலோர கப்பற்படை கப்பல் மீதும் சீனாவின் கடலோர கப்பற்படை கப்பல்வேண்டுமென்றே மோதியதாக பிலிப்பைன்ஸ் குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் இதனை மறுத்துள்ள சீனா, பிலிப்பைன்ஸ் வேண்டுமென்றே சர்ச்சையை உருவாக்குகிறது" என தெரிவித்துள்ளது.

"எங்கள் நாட்டு கடல்வழி போக்குவரத்தை சீனா தடுக்க நினைக்கிறது. இதற்காக அந்நாடு ஆபத்தான வழிமுறைகளை கையாண்டு வருகிறது.

இதனால் கடல் பயணம் மேற்கொள்ளும் எங்கள் நாட்டினரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது என இது குறித்து பிலிப்பைன்ஸ் தெரிவித்தது.

இக்கடல் பகுதியில் பிலிப்பைன்ஸை தவிர மேலும் பல நாடுகளின் பல பகுதிகளுக்கு சீனா உரிமை கொண்டாடி வருகிறது.

இதன் காரணமாக வியட்நாம், தைவான், மலேசியா மற்றும் புருனே ஆகிய நாடுகள் சீனாவுடன் சுமூக உறவில்லாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# 12 கோடிக்கு... வரவுள்ள ப...

உலகில் பழம்பெரும் மதுபானம் ஏலத்திற்கு வரவுள்ள நிலையில் அந்த மதுபான போத்தல் ரூபா 12 கோடிக்கு ஏலத்திற்கு எடுக்கப்படுமென தகவல் வெளியாகி அனைவரையும் ஆச்சரியப் படவைத்துள்ளது.

சாதாரண மதுபானம் முதல் சர்வதேச மதுபானம் வரை பல வகைகளில் பல விலைகளில் இந்த மதுபானங்கள் விற்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் உலகில் மிகவும் மதிப்பு மிக்கதாக கருதப்படும் ஸ்கொட்ச் விஸ்கியான Macalllan Adami 1926 என்ற பிராண்டில் 96 ஆண்டு கால பழைமையான மதுபானம் ஏலத்திற்கு வரவுள்ளது.

இந்த மதுபோத்தல் வரும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ப நசுக்கவும் தயார்!

## ல் ஆவேசம்

**எனவும், ஆனால் எப்போது என்பதை நாங்கள் முடிவு**
**சரான நிர் பர்கத் தெரிவித்துள்ளார்.**

இஸ்ரே லையில் பு படை புல்லா தாக்கு த்துள்ள

லேயே மட்டு மொத்த

மாக அழிக்கும் நிலை வரும் என நிர் பர்கத் கொந்தளித்துள்ளார்.


மேலும் ஹமாஸ்போன்றே லெபனானும் ஹெஸ்புல்லாவும் பெரும் விலை கொடுக்கப் போகிறார்கள். ஆனால் அது போதாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

20,000 போராளிகளுடன், மத்திய கிழக்கின் மிகவும் சக்திவாய்ந்த துணை இராணுவப் படைகளில் ஒன்று ஹெஸ்புல்லா. ஒவ்வொரு ஆண்டும் இந்த அமைப்புக்கு நூற்றுக்கணக்கான மில்லியன் டொலர்களை ஈரான் வழங்குவதாக நம்பப்படுகிறது.

2006இல் ஹெஸ்புல்லா தொடர்பில் இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையே மோதல் வெடித்தது.

தற்போது ஈரான் உத்தரவிடாமல் ஹெஸ்புல்லா களமிறங்காது என குறிப்பிட்டுள்ள நிர் பர்கத், பல வகையில் ஹெஸ்புல்லா தான் ஈரான் எனத் தெரிவித்தார். (நி)

## நாடு திரும்பிய நவாஸ் ஷெரீப்
### பாகிஸ்தான் அரசியலில் திடீர் பரபரப்பு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் கட்சியின் நிறுவன தலை வருமான நவாஸ் ஷெரீப், நான்கு ஆண்டுகளுக்கு பின் நாடு திரும்பினார்.

இவர் பல்வேறு ஊழல் வழக்குகளில் சிக்கி அந்நாட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

உடல்நலக்குறைவு ஏற்பட்டதால், சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல பிணை அவருக்கு வழங்கப்பட்டது.

இதனையடுத்து ஐரோப்பிய நாடான பிரித்தானியா சென்ற அவர், பின் பாகிஸ்தான் திரும்பவில்லை.

பாகிஸ்தான் அரசின் பதவிக்காலம் முடிவடைந்ததைத் தொடர்ந்து, அங்கு விரைவில் பொதுத்தேர்தல் நடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழ்நிலையில், தற்போது பிரித்தானியாவில் இருந்து டுபாய் வந்த நவாஸ் ஷெரீப், அங்கிருந்து விமானம் மூலம் இஸ்லாமாபாத் சென்றடைந்தார்.

விமான நிலையத்தில் அவரை கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் வரவேற்றனர்.

இது தொடர்பாக கட்சியின் முக்கியஸ்தரான கவாஜா முகமது ஆசிப் கூறுகையில்,

இது நம்பிக்கை மற்றும் கொண்டாட்டத்திற்கான நேரம். நவாஸ் ஷெரீப் நாடு திரும்பு வது நாட்டிற்கும், பொருளா தாரத்திற்கும் நல்லதெனத் தெரிவித்தார்.

நவாஸ் நாடு திரும்பியதும் கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவருக்கு இடைக்கால பிணை வழங்கி இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)

## ரேல் தாக்குதல்
## . 13 பேர் பலி



ர் கொல்

திமுகாம்

மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் சிறுவர்கள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பாலஸ்தீன அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் நிவாரண முகவர் அமைப்பு யு.என்.ஆர்.டபில்யூ.ஏ தெரிவித்துள்ளது.

ஒரு இஸ்ரேலிய படைவீரர் கொல்லப்பட்டுள்ளார் பலர் காயமடைந்துள்ளனர் என ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலை தொடர்ந்து தனது சேவைகளை இடைநிறுத்தியுள்ளதாக ஐ.நா அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

## இந்தியாவுடனான எல்லையில்
## அதிகரிக்கும் சீனாவின் ஆதிக்கம்

(வோஷிங்டன்)

இந்தியா உடனான எல்லைப் பகுதியில் உட்கட்டமைப்பு வசதிகளை சீனா தொடர்ந்து அதிகரித்து வருவதாக அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

இதுகுறித்து பென்டகன் வெளியிட்டுள்ள வருடாந்திர அறிக்கையில், போர்களை எதிர்த்துப் போராடி வெற்றி பெறும் திறனை சீனா வலுப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளளது.

2049 ஆம் ஆண்டுக்குள் உலகத் தரம் வாய்ந்த இராணுவத்தை உருவாக்குவதே சீனாவின் இலக்கு என்றும் பென்டகனின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்திய, சீன எல்லையில் உள்ள டோக்லாம் அருகே நிலத்தடி சேமிப்பு வசதிகள், புதிய சாலைகள், பூட்டானின்சர்ச்சைக்குரிய பகுதிகளில் புதிய கிராமங்களையும் சீனா உருவாக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாங்காங் ஏரியின் மீது இரண்டாவது பாலம் மற்றும் இரட்டைப் பாலம் மற்றும் விமானத் தளங்களையும் சீனா கட்டமைத்து வருவதாகவும் பென்டகன் குறிப்பிட்டுள்ளது. (நி)

## கு ஏலத்திற்கு
## மதுபானம்



நவம்பர் மாதம் ஏலத்திற்கு வரவுள்ளது.

இந்த போத்தல் ரூ.12 கோடி வரை ஏலம் போக வாய்ப்புள்ளதாகவும் 2019 ஆம் ஆண்டு இதேபோன்ற ஒரு மதுபோத்தல் ரூ.13 கோடிக்கு ஏலம் போனது குறிப்பிடத்தக்கது. (நி)

### அமெரிக்கா தலைமையில்
## மூன்றாம் உலகப்போர் மூளும்!
## பாதுகாப்புத்துறை நிபுணர் எச்சரிக்கை!

(வோஷிங்டன்)

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்பினர்களுக்கிடையிலான போரால் மூன்றாம் உலகப்போர் மூளும் அபாயம் உள்ளதாக பாதுகாப்புத்துறை நிபுணர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

இது குறித்து அந்த பாதுகாப்புத்துறை நிபுணர் கூறியதாவது, "இஸ்ரேல் இராணுவம், பாலஸ்தீனத்தின் ஹமாஸ் அமைப்பினர்களுக்கு இடையே போர் நடைபெற்று வருகிறது.

காசா பகுதி மக்களுக்கு ஆதரவாக லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேலுக்கு எதிராக நேரடியாக போர் தொடுக்க வாய்ப்பிருக்கிறது.

சுமார் ஒரு லட்சம் வீரர்கள், 2 லட்சம் அதிநவீன ஏவுகணைகள், ஏராளமான பீரங்கிகளை கொண்ட ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் நேரடியாக போரில் இறங்கினால் பாதிப்புகள் அதிகமாக இருக்கும்.

இஸ்ரேல் இராணுவம் தரைவழித் தாக்குதலை தொடங்கினால் முஸ்லிம் நாடுகளில் கொந்தளிப்பு ஏற்படும்.

பாலஸ்தீன மக்களுக்காகவும் முஸ்லிம் நாடுகளுக்கு ஆதரவாகவும் ரஷ்யா, சீனா உள்ளிட்ட நாடுகள் குரல் எழுப்பி வருகின்றன.

இதே சூழல் நீடித்தால் அமெரிக்கா தலைமையில் ஓரணியும் ரஷ்யா, சீனா தலைமையில் எதிரணியும் போரில் களமிறங்க வாய்ப்பிருக்கிறது.

எனவே இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் 3 ஆம் உலகப் போராக மாறக்கூடிய ஆபத்து அதிகம் இருக்கிறது" என சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கடுகு



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஐயவி என்பது சிறிய வெண்கடுகுச் செடி. ஓராண்டுச் செடி. வெண் கடுகுக்காக இது பயிரிடப்படுகிறது.சிறு வெண் கடுகு எனப்படும் ஜயவி, ஒரு சிறு செடி, இரண்டடி உயரம் வரையில் ஓங்கி வளரும்.இது ஜவன வெண்ணெல் விளைநீர் கொல்லையில், அதன் கதிர்களோடு பிணங்கி வளருமென்பர் மாங்குடி மருதனார்.

"... நெடுங்கால் ஜயவி ஜவன வெண்ணெலொடு அரில் கொன்பு நீடி"

(மதுரை 287-288)

போரில் புண்பட்ட வீரர்களைப் பேய்க்கணம் தீண்டாதிருக்கும் பொருட்டு ஜயவி புகைப்பர் என்றும், ஜயவினைச் சிதறுவர் என்றும் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

வேம்பு மனை ஒடிப்பவும் காஞ்சிப் பாடவும்
நெய்யுடைக்கையர் ஜயவி புகைக்கவும்" (புறநா.296:13)

" ஜயவி சிதறி ஆம்பல் ஊதி இசைமணி எறிந்து,
காஞ்சிபாடி காக்கம் வம்மோ " (புறநா 281:45)

ஜயவி ஆரல் மீனின் முட்டை போன்றது என்பர். ஆரல் என்ற ஜயவி முட்டை (புறநா 342:9)

ஜயவி மிகச் சிறியது. அதன் நிறை மிகக் குறைவானது. வான் மீகியார் என்ற புலவர் வையகத்தையும் மனிதன் நோக்கும் தவத்தையும் துலாக் கோலில் நிறை போடுகிறார். தவத்திற்கு முன்பே, ஜயவி நிறைக்குக் கூட வையகம் நிறைபோகாது என்று சுறுகின்றார்.

இதன் தாவரவியற் பெயர் (Brassica alba: குடும்பம் Cruciferae மஞ்சள் நிறமலர்கள் நுனிவளர் பூங்கொத்தில் உண்டாகும்.இதன் கனியில் உண்டாகும் விதைகள் வெண்ணிறமானவை.

இதில் இன்னொரு சிற்றினம் கருங்கடுகு. அதனுடைய தாவர வியற் பெயர் Brassica juncea ஆகும்.

### கருங்கடுகு:

" கடிப்பகை என வரு கடுகினை நாளு
மிளகில வணத்தொடு மூன்று மொன்றாக்கி
யடுபுன வருந்து முன யிலவை கறைதொனும்
வளி முதன் மூலிகை வயியெலாம் அகலும்
பச்சடி முதற்கறி பண் பினால் ஆயிலினு
நிச்சய மாயுணி கழ் பிணி அறுக்குமே"

பொருள்- ஒவ்வொரு நாள் விடியற் காலையிலும் கடுகு, மிளகு உட்பட இம் மூன்றும் ஒரு திறையில் சேர்த்துச் சாப்பிட்டு உடனே வெந்நீர் குடிக்க வளி, தீ,ஐயம் (வாத, பித்த, கபம்) இவைகளால் உண்டான நோய்கள் நீங்கும். கடுகு சேர்ந்த பச்சடி முதலிய கறிகள் புசித்து வந்தாலும் உடம்பிலுள்ள மேற்படி நோய்கள் நீங்கும். சிறு நீரைப் பெருக்கும். ஆனால் பச்சைக் கடுகு வாந்தியை உண்டு பண்ணும்.



இது தலையிடியைத் தரக்கூடிய இருமல், மூக்கால் நீர் வடிதல், கோழை, வெறி, காணாவிடக்கடி, குடைச்சல், மந்தம், குழப்பிய உமிழ்நீர், கழிச்சல், வயிற்றுவலி, முப்பிணி இவைகளை விலக்கும்.

சீரக்கடுப்பு, கீல்வாயு, செரியாமை, தலைச் சுற்றல், விக்கல் இவைகளையும் போக்கும்.

### வெண்கடுகு

"பாலக்கிர கம்பூத வைகாச மோட்டிவிடும்
ஆலவியுங் கடிகளாற்றங்காண்- கோலமிகு
வள்ளைச் செவிமாதே மாபங்க நோய் விலக்கும்
வெள்ளைக் கடுகின் விதி..."

பொருள்- "குழந்தை கட்கு உண்டாகும் தோஷங்கள், பூத பைசாச பார்வை, கடிகளின் குற்றம், முடக்கு வாயு இவை நீங்கும்.

கடுகு 2 கிராம் அளவு எடுத்து நீரில் கலக்கி கொடுக்க வாந்தி உண்டாகும். நஞ்சுண்டவர்களுக்குக் கொடுக்க உண்ட நஞ்சு வெளியாகும்.

கடுகை அரைத்துக் கெண்டைச் சதைகளில் துணியிற்றடவிப் போட சுரவேகத்தினாலுண்டாகும் மயக்க தோஷங்கள் நீங்கும். கால் கைகளில் தடவிச் சீலையை சுற்றி வைக்க அவைகளில் தங்கிய சீத குணம் நீக்கி வெப்பமுண்டாகும்.

கடுகெண்ணையை தேய்த்துக் குளிப்பதனால் குட்ட விரணங்கள் தணியும். கடுகெண்ணெய்யை ஒரு தேக்கரண்டியளவு உட்கொண்டு வர யானைக்கால் நோய் தணியும்.

கடுகை பொடி செய்து தொண்டையில் பற்றுப் போட்டால் தொண்டை வலி குணமாகும்.

கடுகை விழுதாக அரைத்து வெள்ளைத் துணியில் தடவி கெண்டைக்கால் சதையில் பற்றுப்போட்டால் காய்ச்சலால் உண்டாகும் உடல் சோர்வு நீங்கும்.

கடுகு (30 கிராம்) கோதுமை (100 கிராம்) கஸ்தூரி மஞ்சள் (100 கிராம்) ,மூன்றையும் அரைத்து, முட்டையின் வெள்ளைக் கருவில் கலந்து மூட்டுக்களில் பற்றுப் போட்டால் எப்படிப்பட்ட மூட்டுவலியும் குணமாகும்.

கடுகை(20 எண்ணிக்கை) தேன் சேர்த்து அரைத்துக் கொடுத்தால் மூச்சிரைப்பு, இருமல் குணமாகும்.

கடுகை நீரில் ஊற வைத்து முளைக்க வைத்த பிறகு அதை அரைத்து தலையில் தேய்த்துக் குளித்தால் நாள்பட்ட தலைவலி குணமாகும்.

கடுகு, உப்பு, மிளகு, தலா இரண்டு கிராம் எடுத்து அரைத்து வெந்நீரில் கலந்து தினமும் குடித்தால் வாத, பித்த, கப தோஷங்கள் அனைத்தும் நீங்கும்.

கடுகை இரவு முழுவதும் ஊறவைத்து அந்த தண்ணீரை அதிகாலையில் குடித்து வந்தால் நாட்பட்ட விக்கல் குணமாகும்.

கடுகை தேவையான அளவு எடுத்து, அரைத்து தொப்புளில் லேசாக பற்றுப் போட்டால் நீர்க்கடுப்பு குறையும்.

கடுகை தண்ணீரில் அரைத்து வெண்புள்ளிகள் படைகள் மீது பூசும் போது உடடினடியாக கொப்புலம் உண்டாகும் நமைச்சலும் இருக்கும்.அதன் பின் கொப்புளத்தின் மீது நெய்யினைப் பூசினால் ஓரிரு நாளில் புண் குணமாகும்.அதன் பின் கடுகை களிம்பாக்கி அல்லது " ஜிமாத் பார்ஸ்" வெண் புள்ளிகள் மீது மீண்டும் பூசினால் குணம் பெறும். இதுவே படையை குணமாக்கும்.

### பிளாஸ்டர்

கடுகு பிளாஸ்டர் உடலில் எந்தப் பாகத்தில் வீக்கம் ஏற்பட்டாலும் அதை கரைக்க சிறந்த மருந்தாக அமைந்திருக்கின்றது.மாடுகளின் கழுத்தில் கட்டி வீக்கம் தோன்றும் போது கடுகை அரைத்துப் பசையாக்கிச் சுட வைத்து அதை துணியின் மீது பூசி வெதுவெதுப்பாக இருக்கும் போது வீக்கமுள்ள இடத்தில் பற்றுப் போடுவார்கள். இதனால் இரத்தக் கட்டிகள், வீக்கங்கள் கரைந்து குணம் பெறுகின்றன.

கடுகை தண்ணீரில் அரைத்து பசையாக்கி பஞ்சில் நனைத்து தொண்டையின் மீது பூசினால் தொண்டை கரகரப்பு நீங்கும் மூக்கின் தண்டிலும் கால் பாதங்களிலும் தேய்த்தால் மண்டைச் சளி நீங்கும்.

### விக்கல்

12 கடுகைத் தண்ணீரில் கொதிக்க வைத்து வடிகட்டிக் குடிப்பதனால் எப்படிப்பட்ட விக்கல் இருந்தாலும் குணம் பெறும்.

### வழுக்கைத் தலை

பங்கஸ் எனும் கிருமியால் மீசை, தாடி மற்றும் மண்டையில் ஆங்காங்கே சொட்டை ஏற்பட்டு முடி உதிர்ந்து விடும். அதை குணமாக்க கடுகைத் தண்ணீரில் அரைத்து பாதிக்கப்பட்ட இடத்தின் மீது பூசலாம் கொப்புளம் வந்த பின் நெய் பூசினால் சொட்டைத்தலை நோய் நீங்கி விடும்.

### மாதவிலக்கு வலி.

ஒரு பாத்திரத்தில் வெந்நீர் போட்டு அதில் கடுகை அரைத்து கலந்து வைத்து விட வேண்டும். அதில் பெண்கள் உட்கார்ந்தால் மாதவிலக்கு சமயத்தில் வரும் வலி நீங்கும். மேலும் மாதவிலக்கு அதிகமாகவும் தாராளமாகவும் வெளியேறும்.

கடுகை பவுடராக்கி அரிசி மாவில் கலந்து பசையாக்கித்துணியில் பூசி பற்றாகப் போட்டால் தலைவலி, மார்பு வலி கெண்டைக்கால் வலி, வீக்கம் குணம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற தேசிய மீலாதுன் நபி விழா

## ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

(மன்னார்)

மன்னாரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆரம்பமான தேசிய மீலாதுன் நபி விழாவில் கலந்து கொள்ள பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் மாவட்ட செயலக ஊடக அலுவலருக்கும் அனுமதி வழங்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தலைமையில் இவ்விழாவிற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தானின் கட்சி சார்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு அரசியல் நிகழ்வு போல் குறித்த தேசிய மீலாதுன் நபி விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றதாக ஊடகவியலாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். ( நி-285)

# மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய உள்ளதாக மின் பாவனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கிய அனு மதி சட்டவிரோதமானது என அந்த சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வருடமொன்றுக்கு மூன்று தடவைகள் மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை சட்டத்தில் இடமில்லை.

அத்துடன், மின் கட்டணத்தை அதிகரிக்க மின்சார சபை முன் வைத்த 4 காரணங்களும் பொய்யானவை எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (நி)

# சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி பனை விதைகள் நாட்டி வைப்பு

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட வலைப்பாடு கிராமத்தில் கடற்கரை பாதுகாப்பு மற்றும் சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி அக் கிராமத்தில் 10,000பனை விதை நடுகை செய்யப்பட்டு வருகின்றது.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் "சுற்றுச்சூழல் அபாயங்களை தடுக்க இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்" எனும் தொனிபொருளில் குறித்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (நி-100)

## கசிப்புடன் ஒருவர் கைது

(அராலி)

பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மயிலிட்டி பகுதியில் 120 லீற்றர் கசிப்பு மற்றும் 800 லீற்றர் கோடாவுடன் 37 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத் தடுப்பு பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-104)

# போதைப்பொருளை ஒழிக்க ஒன்றிணைந்து செயற்படுவோம்

## புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி

(முல்லைத்தீவு)

போதைப்பொருளை ஒழிக்க தகவல்களை தாருங்கள் இரகசியம் பேணப்படும் என புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹெரத் தெரிவித்தார்.

கிராமங்களிலுள்ள மக்களின் பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் முகமாக ஜனசபா அங்குராப்பண நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்,

மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 19 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் உள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்திற்கு கடமைக்கு வந்து இரண்டு வருடங்கள் ஆகின்றன. கூடுதலாக கசிப்பு போதைப்பொருளுக்கு உட்படுகின்ற பிரதேசமாக புதுக்குடியிருப்பு புதிய குடியிருப்பு கிராமமே இருக்கின்றது.

கிராமத்தில் இருக்கக்கூடிய அதிகமானோர் பொலிஸில் முறைப்பாடோ அல்லது தகவல்களோ வழங்குவதில்லை. சிலர் தகவல்களை வழங்கினாலும் அவர்களுடைய பாதுகாப்பினை உறுதிப்படுத்தி சுற்றிவளைப்புக்களை மேற்கொள்கின்றோம்.

நீதிமன்றத்தில். மனித உரிமைகள், சட்டங்கள், மக்களுடைய பாதுகாப்பு ஆகிய விடயங்கள் கருத்தில் கொள்ளப்படும். தகவல்களை தாருங்கள் தற்போது கைது செய்யப்படுவதனை விட அதிகமானோர் கைது செய்யப்படுவார்கள்.

ஜனசபா செயற்குழுவினை உருவாக்கியமை இவ்வாறான பிரச்சினையை தீர்ப்பதற்கே. பிரச்சினைகளை எமக்கு அறியத் தாருங்கள் தகவல்கள் பாதுகாக்கப்படும் என மேலும் தெரிவித்தார். (நி-299)

# இலவச சித்திர வித்தியாரம்பம்


(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி சித்திரப்பயிற்சி நிறுவனத்தில் வழமை போல விஜயதசமி தினத்தை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை சித்திர வித்தியாரம்பம் நடைபெறவுள்ளது.

எனவே பயில விரும்பும் மாணவர்கள் அன்றைய தினம் பி.ப 4 மணிக்கு வருகை தருமாறு அதன் இயக்குநர் அறிவித்துள்ளார். (நி)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2946

சுருதி




அபினாஸ்




மருணிசியா




அஸ்வின்




அதிசயா




சாந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 315





உணர்ச்சியோடு இருந்த மற்றவர்கள் 'ஐயோ!' என்று அழுது புலம்பிய சோகக் குரல் காவேரி நதியின் ஓங்காரக் குரலை அடக்கிக் கொண்டு மேலெழுந்தது. நதிக்கரை மரங்களில் வசித்த பறவைகள் அதைக் கேட்டுத் திகைத்து மோனத்தில் ஆழ்ந்தன.

சட்டென்று ஓர் அற்புதக் காட்சி தென்பட்டது. படகுக்குச் சற்றுத் தூரத்தில் ஆற்று வெள்ளத்தின் மத்தியில் அது தெரிந்தது. பெண் உருவம் ஒன்று இரண்டு கைகளிலும் குழந்தையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு நின்றது. அந்த மங்கையின் வடிவம் இடுப்புவரையில் தண்ணீரில் மறைந்திருந்தது. அப்பெண்ணின் பொன் முகமும், மார்பகமும், தூக்கிய கரங்களும் மட்டுமே மேலே தெரிந்தன. அவற்றிலும் பெரும் பகுதியைக் குழந்தை மறைத்துக் கொண்டிருந்தது. எல்லாரையும் போல் சுந்தர சோழரும் அந்தக் காட்சியைப் பார்த்தார். உடனே பாய்ந்து நீந்தி அந்தத் திசையை நோக்கிச் சென்றார். கைகளை நீட்டிக் குழந்தையை வாங்கிக் கொண்டார். இதற்குள் படகும் அவர் அருகில் சென்றுவிட்டது. படகிலிருந்தவர்கள் குழந்தையைச் சுந்தர சோழரிடமிருந்து வாங்கிக் கொண்டார்கள். சக்கரவர்த்தியையும் கையைப் பிடித்து ஏற்றி விட்டார்கள். சக்கரவர்த்தி படகில் ஏறியதும் நினைவற்று விழுந்துவிட்டார். அவரையும், குழந்தையையும் கவனிப்பதில் அனைவரும் ஈடுபட்டார்கள். குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்த மாதரசி என்னவானாள்? என்று யாரும் கவனிக்கவில்லை. அவளுடைய உருவம் எப்படியிருந்தது? என்று அடையாளம் சொல்லும்படி யாரும் கவனித்துப் பார்க்கவும் இல்லை. "குழந்தையைக் காப்பாற்றியவள் நான்!" என்று பரிசு கேட்பதற்கு அவள் வரவும் இல்லை. ஆகவே காவேரி நதியாகிய தெய்வந்தான் இளவரசர் அருள்மொழிவர்மரைக் காப்பாற்றிக் கொடுத்திருக்க வேண்டும் என்று அனைவரும் ஒரு முகமாக முடிவு கட்டினார்கள். ஆண்டுதோறும் அந்த நாளில் பொன்னி நதிக்குப் பூஜை போடவும் ஏற்பாடாயிற்று. அதுவரை அரண்மனைச் செல்வனாயிருந்த அருள்மொழிவர்மன் அன்று முதல் 'பொன்னியின் செல்வன்' ஆனான். அச்சம்பவத்தை அறிந்த அரச குடும்பத்தார் அனைவரும் பெரும்பாலும் 'பொன்னியின் செல்வன்' என்றே அருள்மொழிவர்மனை அழைத்து வந்தார்கள்.

### பதின்நான்காம் அத்தியாயம்
### இரண்டு பூரண சந்திரர்கள்

அன்று தஞ்சை நகரம் அல்லோலகல்லோலப்பட்டது. பல காலமாகத் தலைநகருக்கு வராதிருந்த இளவரசி மனம் மாறித் தஞ்சைக்கு வருகிறார் என்றால் அந்த நகர மாந்தர்களின் எக்களிப்புக்குக் கேட்பானேன்? சோழ நாட்டில் இளவரசி குந்தவையின் அழகு, அறிவு, தயாளம் முதலிய குணங்களைப் பற்றித் தெரியாதவர்கள் இல்லை. தினம் ஒரு தடவையாவது ஏதேனும் ஒரு வியாஜம் பற்றி அவருடைய பெயரைக் குறிப்பிட்டுப் பேசாதவர்களும் இல்லை. இந்த வருஷம் நவராத்திரி வைபவத்துக்கு இளவரசி தஞ்சை அரண்மனையில் வந்து இருப்பார் என்ற வதந்தி முன்னமே பரவி மக்களின் ஆவலை வளர்த்திருந்தது. எனவே, இன்றைக்கு வருகிறார் என்று தெரிந்ததும் தஞ்சைக் கோட்டை வாசலில் ஒரு ஜன சமுத்திரமே காத்துக்கொண்டிருந்தது. பூரண சந்திரனுடைய உதயத்தை எதிர்பார்த்து ஆஹ்லாத ஆரவாரம் செய்யும் ஜலசமுத்திரத்தைப் போல் இந்த ஜனசமுத்திரமும் ஆர்வம் மிகுந்து ஆரவாரம் செய்து கொண்டிருந்தது.

கடைசியில், பூரணசந்திரனும் உதயமாயிற்று. ஏன்? இரண்டு நிலாமதியங்கள் ஒரே சமயத்தில் உதயமாயின. தஞ்சைக் கோட்டை வாசலண்டை குந்தவை தேவி தன் பரிவாரத்துடன் வந்து சேர்ந்தபோது, கோட்டைக் கதவுகள் தடால் என்று திறந்தன. உள்ளேயிருந்து தேவியை வரவேற்று அழைத்துப் போவதற்காக அரண்மனைப் பரிவாரங்கள் வெளிவந்தன. அந்தப் பரிவாரங்களின் முன்னிலையில் இரு பழுவேட்டரையர்களும் இருந்தார்கள். அது மட்டுமல்ல அவர்களுக்குப் பின்னால், முத்துப்பதித்த தந்தப் பல்லக்கு ஒன்றும் வந்தது.

(தொடரும்...)

---

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு
## யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்

"தனிமரம் தோப்பாவதில்லை" என்பது முதுமொழி குடும்பம் என்றால் கணவன், மனைவி, பிள்ளைகள், தாய், தந்தை, சகோதரன், சகோதரி முதலிய உறவு முறைகளால் பிணைக்கப்பட்டு வாழ்ந்து வரும் மனிதரின் சிறுகுழுவை நாம் குடும்பம் என்று அழைக்கின்றோம்.

குடும்பத்தினை சிலர் குத்து விளக்கிற்கும் சிலர் குடும்பத்தை கோயிலுக்கும்ஒப்பிடுவர். குடும்பம் ஒன்று சேர்ந்து வாழும் போது அன்பு, புரிந்துணர்வு, விட்டுக்கொடுத்தல் போன்ற பண்புகள் காணப்பட வேண்டும்.

ஒவ்வொரு குடும்பத்திலும் "குலக்கொழுந்து" பிள்ளைகளே! குழந்தை கடவுளின் வடிவம் என்று கூறுவார். குழந்தைகளின் உள்ளங்களில் சிறு வயதிலேயே நல்ல விதைகளைத் தூவி விட வேண்டும். அப்போதுதான் அவர்கள் நற்பண்புகளில் வாழ்வார்.

ஒற்றுமையாக வாழ்ந்து குழந்தைகளை நல்ல முறையிலே பராமரித்து நற்பண்புகளில் திளைக்கும் குடும்பத்தை பல்கலைக்கழகத்திற்கு ஒப்பிடுவார்கள்.

பல்கலைக்கழகம் பட்டதாரி மாணவனை ஆக்குவதைப் போல் குடும்பமும் நல்ல முறையில் பிள்ளைகளை வளர்த்தெடுத்து ஏனைய குடும்பங்களுக்கும் முன்மாதிரியாகத் திகழுமாயின் அது ஒரு பல்கலைக் கழகமாகும்.

ந.ரம்சிகா

---

## படித்ததில் பிடித்தது

உழைக்க நேரத்தை எடுத்துக் கொள்
-அது வெற்றியின் விலை

சிந்திக்க நேரத்தை எடுத்துக் கொள்
-அது வெற்றியின் ஊற்று

விளையாட நேரத்தை எடுத்துக் கொள்
- அது இளமையின் ரகசியம்

படிக்க நேரத்தை எடுத்துக் கொள்
- அது அறிவின் வாயில்

நல்லதைப் புரிய நேரத்தை எடுத்துக் கொள்
- அது இன்பத்தின் பாதை

கனவு கான நேரத்தை எடுத்துக் கொள்
- அது சாதனைக்கு வழி

அன்பு காட்ட நேரத்தை எடுத்துக் கொள்
- அது இறைவனின் கொடை

சேவை புரிய நேரத்தை எடுத்துக் கொள்
- அது வாழ்க்கையின் குறிக்கோள்

தி.செயந்தினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைக்கு இரண்டே காரணம் தான்! யோசிக்காமல் செயல்படுவது. செயல்படாமல் யோசித்துக்கொண்டே இருப்பது. – யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தொழில்துறையை மூடவைத்து பொருளாதாரத்தை வளர்ப்போம்

ஒருமுறை தமிழகத்தில் பொறியியல் துறையைத் தமிழில் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

பொறியியலைத் தமிழில் கற்பிப்பதென்பது நடைமுறைச் சாத்தியமற்றதெனும் கருத்து மேலெழுந்தது.

இதன்போது துக்ளக் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த சோ.இராமசாமி அவர்கள் தனது துக்ளக் சஞ்சிகையில் **தமிழனைக் கொன்று தமிழை வளர்ப்போம்** என்பது போல இருக்கிறது. தமிழில் பொறியியல் கற்கைநெறியைத் தொடங்குவது என கருத்துரைத்திருந்தார்.

இப்போது இலங்கை அரசாங்கம் மின் கட்டணத்தை 18 வீதத்தால் உயர்த்துவதைப் பார்க்கும்போது உள்நாட்டில் தொழில் துறையை அழித்து பொருளாதாரத்தை வளர்ப்பது போல இருக்கிறது நிலைமை.

ஆம், இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமான நெருக்கடிக்குள் வீழ்ந்து கிடக்கிறது. பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்குச் சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடைந்தபோது, அந்நிதியம் பல்வேறு நிபந்தனைகளை இலங்கைக்கு விதித்தது.

என்ன செய்வது, ஐ.எம்.எப் இன் நிபந்தனைகளை நிறைவேற்றத் தலைப்பட்ட போது, புதிய புதிய பிரச்சினைகளை அரசாங்கம் எதிர்கொண்டது.

வெளிநாட்டு நாணயச் சம்பாதிப்பு இல்லாமல் நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியாதென்ற கருத்து நிலை ஏற்பட்டபோது, ஏற்றுமதி சார் தொழில்துறைகளை உருவாக்குவதை விடுத்து, இந்த நாட்டின் மனித மூலதனத்தை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை அரசாங்கம் தீர்மானமாகக் கருதியது.

அதன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களுக்கு ஐந்து வருட விடுப்பு வழங்க, எங்கே என்றிருந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ நிபுணர்கள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்கள் நாட்டைவிட்டு கடகடவென வெளியேறினர்.

நம்மவர்கள் வெளிநாடு சென்று அங்கு வேலை செய்தால், இங்கு வெளிநாட்டு நாணயம் வந்து சேரும் என்ற கணிப்பு சரியாக இருந்ததாயினும் அதன் மறுபுறத்தில் நாட்டில் புத்திஜீவிகள், மருத்துவ நிபுணர்கள் ஆகியோரின் வெளியேற்றம் மிகப்பெரும் நிர்வாகக் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் உள்நாட்டில் தொழில் துறையை வளர்த்தெடுக்கின்ற உபாயத்தைக் கையாள்வதன்மூலம் பொருளாார அபிவிருத்தியை முன்னெடுக்கலாமென்றால், அதுபற்றி இம்மியும் சிந்திக்காத அரசாங்கம் மின் கட்டணத்தைக் கண்டபாட்டில் உயர்த்தி வருகிறது.

பொதுவில் மின்கட்டண உயர்வு அனைத்து உற்பத்திகள் மீதும் விலையேற்றத்தை ஏற்படுத்தும்.

இதனால் சாதாரண முதலீட்டுடன் இருக்கக் கூடிய தொழில்துறைகள் நட்டமடைய அவற்றை மூடுகின்ற முடிவை உரியவர்கள் எடுப்பர்.

ஆக, பொருளாதாரத்தை மீட்டெடுக்க வெளிக்கிட்டு தொழில் துறைகளுக்கு மூடுவிழாச் செய்ததுதான் மிச்சம் என்பதாக மின்கட்டண அதிகரிப்பின் நிலைமை அமையப் போகிறது.

# டிஜிட்டல் மயமாக்கப்பட்ட பொருளாதாரமே சர்வதேச தரத்தை உறுதி செய்யும்

## உலக வர்த்தக சங்க தலைவர் – மரியா

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தின் சகல துறைகளும் டிஜிட்டல் மயப்படுத்தப்படுவதன் மூலமே அவற்றின் உலகளாவிய தரத்தை உறுதிசெய்ய முடியும் என்று சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மரியா பெர்னாண்டா கார்ஸா சுட்டிக்காட்டியுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு கடந்த புதன்கிழமை இலங்கைக்கு வருகை தந்த சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் முதலாவது பெண் தலைவர் மரியா பெர்னாண்டா கார்ஸா, அலரிமாளிகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவை சந்தித்துக் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது இலங்கையில் வர்த்தகம் மற்றும் முதலீடு, வங்கி, காப்புறுதி, கல்வி மற்றும் பயிற்சி வழங்கல், நிதி, சுற்றுலா, விவசாயம், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்கள், முயற்சியாண்மை அபிவிருத்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் வகிபாகம் குறித்து ஆராயப்பட்டது.

அதேவேளை உணவுப்பாதுகாப்பு மற்றும் ஏற்றுமதி உள்ளடங்கலாக அரசாங்கம் விசேட கவனம் செலுத்திவரும் முன்னுரிமைக்குரிய விடயங்கள் தொடர்பில் சர்வதேச வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் மரியா பெர்னாண்டா கார்ஸாவிடம் பிரதமர் எடுத்துரைத்தார்.

இதனைத்தொடர்ந்து கருத்து வெளியிட்ட மரியா பெர்னாண்டா கார்ஸா, "சர்வதேச வர்த்தக சம்மேளனத்தில் 170 நாடுகள் அங்கம்வகிப்பதுடன் 45 மில்லியன் நிறுவனங்கள் வர்த்தக உறுப்புரிமையைக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று இதில் அங்கம் வகிக்கும் நிறுவனங்கள் உணவுப் பாதுகாப்புசார் சவால்களை உரியவாறு கையாள்வதற்கு அவசியமான உதவிகளை வழங்கும் நோக்கில் கடந்த 2021 ஆம் ஆண்டு விவசாயக் கொள்கை, உணவுப் பாதுகாப்பு மற்றும் விநியோக சங்கிலி தொடர்பான குழு உருவாக்கப்பட்டது.

அதேபோன்று உலகளாவிய தரத்தை உறுதிப்படுத்துவதற்கு பொருளாதாரத்தில் சகல துறைகளும் டிஜிட்டல் மயப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ந-7)

## லெபனான் சிறையிலுள்ள என் கணவரை மீட்டுத்தாருங்கள்

### மனைவி வேண்டுகோள்

பிரான்ஸ்க்கு செல்வதற்காக முகவர் ஒருவரை நம்பி சென்ற யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த ஒருவர் லெபனான் நாட்டின் சிறையில் உள்ளதாகவும் அவரை மீட்டு நாட்டுக்கு கொண்டுவர உதவுமாறும் அவரது குடும்பத்தினரால் உருக்கமான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை வசந்தபுரம் பகுதியைச் சேர்ந்த புவனேஸ்வரன் சயந்தன் என்ற இளம் குடும்பஸ்தரே முகவரை நம்பி ஏமாந்து லெபனான் நாட்டின் சிறையில் சிக்கியுள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவரது மனைவி, பிரான்ஸ் நாட்டுக்கு செல்வதற்கு முகவர் ஒருவரை நம்பி விமானம் மூலம் வெவ்வேறு நாடுகளுக்குச் சென்று லெபனான் ஊடாகப் பிரான்ஸ் செல்வதற்காக இருந்த போது, உரிய ஆவணங்கள் இல்லை என்பதற்காக கைது செய்யப்பட்டு லெபனான் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்ப வறுமை காரணமாக பிரான்ஸ் செல்வதற்காக எனது கணவர் கடந்த ஜூன் மாதம் இலங்கையில் இருந்து புறப்பட்டார். ஐந்து மாதங்கள் ஆகியுள்ள நிலையில் லெபனான் நாட்டின் சிறையில் அவர் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

லெபனான் அருகில் உள்ள இஸ்ரேல் நாட்டில் யுத்தம் இடம்பெறுவதால் எமக்கு பயமாக உள்ளது. எனது கணவரை நாட்டுக்கு கொண்டுவர உரிய தரப்புக்கள் உதவ வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-7.33)

## சுற்றுலாத்துறை வருமானம் 97.5 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வாண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டின் சுற்றுலாத்துறை வருமானம் 97.5 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இது கடந்த ஆண்டை விட மிக அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இவ்வருடத்தில் சுற்றுலாத்துறை வருமானம் 478.7 பில்லியன் ரூபாய் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டின் சுற்றுலாத் துறை வருமானம் 242.4 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## 100 இலட்சம் வாக்குகளால் ரணிலை ஜனாதிபதியாக்குங்கள்

### கேட்கிறார் ஐ.தே.க செயலாளர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவிற்கு 100 இலட்சம் வாக்குகளை வழங்கி அவரை ஜனாதிபதி கதிரையில் அமரச் செய்யுங்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் வஜிர அபேவர்தன கேட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க, நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடியை சீர்செய்து நாட்டைக் கட்டியெழுப்பிய தலைவர் என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

எனவே அனைவரும் ஒன்றிணைந்து அடுத்த தேர்தலில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்வை தெரிவு செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ந-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தின்** ஓமினி அலுமினியம் தொழிற்சாலை - கரந்தன், அரசகேசரி பிள்ளையார் கோவிலடி, நீர்வேலி, கரந்தன், மாலை வைரபர் கோவிலடி, போயிட்டி, பொக்கணை, ஊரெழு அம்மன் கோவில் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** அம்பகாமம், அம்பகாமம் மொபிட்டல் கோபுரம் டயலொக் கோபுரம் - ஒலுமடு, கற்கிடங்கு, நீதிபுரம், ஒலுமடு, பழம்வேலி வயல் வீடு பெரிய புளியங்குளம் (துட்சை அடம்பன்), புலிமெச்சினாதிகுளம், புதியநகர் (துட்சை அடம்பன்), துட்சை அடம்பன் (குறிப்பட்ட முறிப்பு) ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

### மின்சார கட்டண உயர்வு தேவையற்றது

## உரிய முறையில் அரசு வரி அறவிடவில்லை

### சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு

(கொழும்பு)

வரி செலுத்த வேண்டிய மக்களிடம் இருந்து உரிய முறையில் வரியை அறவிடாமல் அரசாங்கம் தொடர்ந்தும் மின் கட்டணத்தை அதிகரிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தியுள்ளார்.

பொரளை இளைஞர்கள் பௌத்த சங்கத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், போதைப் பொருள் மற்றும் மதுபான பாவனையை பிரபலப்படுத்துவதற்காக சில அரசாங்க அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் வரி அறவிடாமல் புதிய மதுபான அனுமதிப்பத்திரங்களை அமைச்சர்கள் ஊடாக பெற்றுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

17



கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஆரியர் என்ற சொல் ஆழியர் என்ற சொல்லின் திரிபாகவும் பிங்கலநிகண்டு அறிவிக்கின்றது. அனைத்தும் இவர் தம் பாண்டிய மன்னரின் தொடர்பையே காட்டு கின்றது.

சிங்கள வரலாற்று இலக்கி யங்களில் ஒன்றான சூளவம்சத் தில் வரும் பின்வரும் கூற்றுக்கள் காணப்படுகின்றன, "முன்பு பஞ்சம் ஒன்று நிலவிய காலத்திலே பாண் டிய இராச்சியத்தில் ஆட்சி புரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதி பதியின் தலைமையில் படை யொன்றை அனுப்பிவைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கி னான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்து விட்டு அரண்கள் பொருந்திய சுப பட்ட ணத்தினுள் (யப்பகூவாவிற்குள்) அவன்புகுந்தான். அங்கிருந்த தந்ததாதுவையும், விலை மதிக்க முடியாத செல்வங்களையும் கவர் ந்து கொண்டு ஆரியச் சக்கரவர்த்தி பாண்டிநாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குல மெனும் தாமரையை மலர்விக் கின்ற கதிரவனை யொத்த குல சேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான்". மேற் கூறப்பட்ட கூற்றிலிருந்து ஆரியச்சக் கரவர்த்தி கள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

சிங்கை ஆரியர்களின் தோற றத்தை பற்றி பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவர்கள் தங்கள் தோற்றத்தை எவ்வாறு விளக்கினார்கள் என்பது தான் முக்கியத்துவம் வாய்ந்தது. இவ் வகையில் 1519-1619 கால பகுதி யில் எழுதப்பட்டதாக நம்பப்படும் "கைலாயமாலை" எனும் நூல் ஒரு சில விளக்கத்தை எமக்கு தரு கின்றது.

"பாண்டிமழவன் பரிந்து சென்று வேண்டி பெருகு புகழ் யாழ்ப்பா ணம் பேரரசு செய்ய வருகுதிநீ என்று வணங்க, திருவரசுமாறற் குச் செம்பொன்மகுடம் அணிந் தோனின் வழி காரணிவனான பெரும் காரணத்தால், பேறு தரச் சாற்றும் இவன் மொழியை தன் மனத்தோர்ந்து எண்ணி, மறு மாற்ற முரையாது நல்ல வாய்மை சொல்லி... துன்றுபுகழ் தென் மதுரை விட்டு திருநகர் யாழ்ப் பாணத்து மன்னரசு செய்ய மன மகிழ்ந்து" (செய்யுள்கள் 79-82 மற்றும் 86)

ஆகையால், கடைசி காலத்து யாழ்ப்பாண அரசர்கள் தங்கள் வம்சத்தை உருவாக்கியது மது ரையை சேர்ந்த ஓர் பாண்டிய இளவரசன் என நம்பினார்கள் என்று கவனிக்க முடிகிறது.

### யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட சிங்கைஆரியனின் வம் சத்தின் வரலாறு

1210 தொடக்கம் 1619 வரை இந்த வம்சத்தை சேர்ந்த 19 மன்னர்கள் யாழ்ப்பாண சிம்மாசனத்தில் ஏறி யுள்ளனர். அவர்கள் பல்வேறு பெயர்களுடனும் வேவ்வேறு வித மாய் அரசு புரிந்தார்கள்.

ஆரம்ப காலத்தில் சிங்கை ஆரி யன்கள் பாண்டிய பேரரசின் கட்டுப் பாட்டில் இருந்தார்கள். இஸ்லாமி யர்கள் மதுரையை நாசம் செய்து பாண்டியர்களை வீழ்த்திய பின்பு தான் இந்த வம்சத்தை சேர்ந்த மன்னர்கள் முக்கியத்துவம் பெற தொடங்கினர். அக்காலத்து மன்னன் மார்த்தாண்ட சிங்கை ஆரியனா வான். இவன் காலத்தில் மொரோ க்கோ நாட்டில் இருந்து இலங்கை வந்த இப்னுபதூதா என்பவனின் மூலம் அக் காலத்தில் சிங்கை ஆரியர்கள் தான் இலங்கைதீவிலே முக்கியத்துவம் வாய்ந்த மன்னர்கள் என்று தெரிகிறது. மார்த் தாண்டன் புத்தளம் பகுதியை கைப்பற்றி முத்து வியாபாரத்தால் யாழ்ப்பாண ராஜ்யம் செழிப்புடன் காணப்பட்டது என்றும் அறிய முடிகின்றது. இவன் காலத்தில் சிங்கள மன்னர் களுடன் போர்க ளும் நடைபெற்றன.

கனகசூரியசிங்கை ஆரியனின் காலம் (1440 தொடக்கம் 1478 வரை) இன்னொரு முக்கித்துவம் வாய்ந்த ஒன்று: 1450 தொடக்கம் 1467 வரை செம்பக பெருமாள் எனும் கோட்டை அரசனின் வளர்ப்பு மகன் யாழ்ப்பாண அரசை கைப் பற்றி அரசு புரிந்தான். இக் காலத் தில் கனக சூரிய மன்னன் மது ரையில் தஞ்சம் தேடினான். இருப் பினும் 1467 இல் ஒரு சிறிய படை எழுப்பியகனக சூரிய அரசன் யாழ்ப் பாணத்தை மீழப்பெற்றான்.

அதன் பிறகு இந்த வம்சத்தை சேர்ந்த மன்னர்களிடம் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கூற ஒரு ஆவல் காணப்பட்டது. அக் காரணத் தால் கனகசூரியனின் மகன் பரராஜ சேகரனின் காலத்தில் தமிழ்சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. மேலும் இம் மன்னன் காலத்தில் பல்வேறு நூல்கள் எழுதப்பட்டன (கணிதம், மருத்துவம், ஜோதிடம் மற்றும் வரலாறு நூல்கள்)

யாழ்ப்பாண அரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர் வதற்கு யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம் எனக் கூறியி ருப்பதுடன் இவ் அரசு காலத்தில் தமிழ் மொழி, சைவசமயம், இலக்கி யம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணு வக்கட்டமைப்பு என்பனவும் வளர்ச்சி யடைந்திருந்ததாகவும் குறிப்பிடு கின்றார். கி.பி. 14 ஆம் நூற்றா ண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள வரலாற்று இலக்கியம் சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக் குறிப்பிட்டு அவற்றுள் யாழ்ப் பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படைப்பலத்திலும், பொருளா தார வளத்திலும் மேலோங்கி இருந் ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு தாழ்நிலப்பகுதிவரை ஒன் பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகவும் கூறுகின்றது.

இப்பரம்பரைக்குரிய 12 ஆட்சியா ளர்கள் பற்றிய தகவல்கள் கிடைக் கப்பட்டுள்ளன. அவ்வனைவரதும் பெயர்களின் பின்னால் சிங்கை ஆரியன் எனும் பெயர் காணப் படுவது சிறப்புக்குரிய விடயமாகும். ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்று விக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர் இவ்வரசு போர்த்துக் கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது.

பின்வருவோர் யாழ்ப்பாண இராச் சியத்தை ஆண்ட மன்னர்கள் ஆவர். கூழங்கை ஆரியச்சக்கர வர்த்தி (1210-1246), குலசேகர சிங்கையாரியன் (1246-1256), குலோத்துங்க சிங்கையாரியன் (1256-1279), விக்கிரம சிங்கையா ரியன் (1279-1302), வரோதய சிங்கையாரியன் (1302-1325), மார்த்தாண்ட சிங்கையாரியன் (1325-1348), குணபூஷண சிங்கை யாரியன் (1348-1371), வீரோதய சிங்கையாரியன் (1371-1394), சயவீர சிங்கையாரியன் (1394-1417), குணவீர சிங்கையாரியன் (1417-1440), கனகசூரிய சிங்கையா ரியன் (1440-1450), செண்பகப் பெருமாள் (1450-1467), கனக சூரிய சிங்கையாரியன் (2ம் தடவை) (1467-1478), பரராச சேகரன் சிங்கையாரியன் (1478-1519), சங்கிலியன் (1519-1560), புவிராஜ பண்டாரம் (1561 -1565), காசி நயினார் (1565 - 1570), பெரிய பிள்ளை (1570 -1572), புவிராஜ பண்டாரம் (1572-1591), எதிர் மன்னசிங்கம் (1591-1615), அரச கேசரி (1615-1617), சங்கிலி குமாரன் (1617-1620).

### கூழங்கைச்சக்கரவர்த்தி (கி.பி 1210-1246)

யாழ்ப்பாணத்து வரலாற்று நூலான யாழ்ப்பாண வைபவமாலையின் படி யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தின் முதலாவது மன்னன் கூழங்கைச் சக்கரவர்த்தியாவான். இவன் தென்னன் நிகரானவன் என்று போற்றப்படுவதால் பாண் டியர் கீழ் ஆட்சி புரிந்த பாண்டிய அமைச்சன் என்று கூறுவோரும் உண்டு. வையாபாடல் இப் பெய ரின் வடமொழியாக்கமான கோளுறு கரத்துக்குரிசில் என்ற பெயரில் இவனைக் குறிப்பிடும். இவன் கை ஊனமுற்று இருந்த காரணத்தால், "கூழங்கையன்" என அழைக் கப்பட்டு பின்னர் "கூழங்கைச் சக்கரவர்த்தி" அல்லது "கூழங்கை ஆரியச்சக்கரவர்த்தி" எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

"மணற்றிடர்" என்று அன்று அழைக்கப்பட்ட யாழ்ப்பாணத்தைப் பரிசாகப் பெற்ற யாழ்ப்பாணனே, இந்தியாவிலிருந்து, தசரதன் மைத் துனனான குலக்கேது என்பவனின் மகனான கூழங்கைச் சக்கரவர்த் தியைக் கூட்டி வந்து முடிசூட்டினான் என வையாபாடல்கூற, சோழ வம்சத்தில் வந்த திசை யுக்கிர சோழனுடைய மருமகனான சிங்க கேது என்பவனுடைய மகனே இவனெனவும், யாழ்பாடியின் பின் அரசனில்லா திருந்த யாழ்ப்பா ணத்தை ஆள இந்தியாவிலிருந்து இவனைப் பாண்டி மழவன் என் னும் ஒருவன் அழைத்து வந்தா கவும் யாழ்ப்பாண வைபவமாலை கூறும். வையாபாடலின் படி இவ னுடைய ஆட்சித் தொடக்கம் கலியுக ஆண்டு 3000 (கி.மு. 101) ஆகும். தற்கால ஆய்வாளர்கள் பலர் இத னை ஏற்றுக் கொள்வதில்லை.

தமிழ்ப் படைகளின் உதவியு டன் இலங்கை மீது படையெடுத்து அப்போதைய தலை நகரமான பொலநறுவையைத் துவம்சம் செய்த கலிங்க மாகன் எனும் கலிங்கத்து இளவரசனே காலிங் கச் சக்கரவர்த்தி என்னும் பெயரு டன் தனியரசு நடத்தினான் என் றும் இப்பெயரே திரிபடைந்து கூழங்கைச் சக்கரவர்த்தியான தென்பதும், சுவாமிஞானப்பிரகாசர், முதலியார் செ.இராசநாயகம் போன் றோருடையகருத்து. தற்போது இதற்குப் போதிய ஆதரவில்லை.

கூழங்கைச் சக்கரவர்த்தியின் காலம் கி.பி 13 ஆம்நூற்றாண்டு என்பதே தற்போது பரவலாக ஏற் றுக் கொள்ளப்படும் காலக்கணக்கு ஆகும்.

இவ்வரசனே நல்லூர் நகரைக் கட்டியவன் என வைபவமாலை குறிப்பிடுகிறது. இவன் சிங்கை நகர் என அழைக்கப்பட்ட இன்னொரு இடத்திலிருந்தே ஆண்டான் என் றும், 15 ஆம் நூற்றாண்டிலேயே நல்லூர் கட்டப்பட்டது என்பதும் சிலருடைய கருத்து.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார்...

கருத்துரைத்த அவர்,

இந்த நிலைமையை தடுக்க எதிர் வரும் நாட்களில் கடுமையான தொழில் சார் நடவடிக்கைகளை எடுக்கத் திட்ட மிடப்பட்டுள்ளது.

உலக வங்கியுடன் தொடர்புடைய நிறுவனம் ஒன்றின் மூலம் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் பெறுமதி கணக்கிடப்படுவதாகத் தெரிவித்த அவர், தனியாருக்கு கடன் வழங்குவதே இந்த நிறுவனத்தின் செயற்பாடாகும்.

இது மிகப் பெரிய மோசடி என்றும், இதற்கு எதிராக கடுமையான தொழில் ரீதியான நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார். (7)

## மின்கட்டண...

அகுனகொலபலஸ்ஸ பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மகிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

உலகின் பணக்கார நாடுகளுக்கு ஜலதோஷம் ஏற்படும்போது ஏழை நாடுகளுக்கு நிமோனியா ஏற்படும் என ஒரு கதை உண்டு.

மின் கட்டணத்தை அதிகரிப்பது நல்லதல்ல. ஆனால், நம் நாட்டில் இன்னும் அனல் மின்சாரம் மூலம் தான் அதிக மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த நாட்களில் பல பகுதிகளில் மழை பெய்தாலும், நீர்மின் நிலையங்களில் இன்னும் 100 வீதம் நீர்மின் உற்பத்தி தொடங்கவில்லை.

மின்சார சபை அதிகாரிகளும் சில தியாகங்களைச் செய்ய வேண்டும். எல்லா நேரத்திலும் மக்கள் மட்டுமே தியாகம் செய்ய வேண்டும் என்று கோருவது நியாயமானதல்ல.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவதே ஒரே வழி. அரசியல் ஆதாயங்களுக்காக தனித்தனியாக செயற்பட்டால், அது நம்மை மேலும் படுகுழியில் தள்ளத் தான் செய்யும் என்றார். (ந-7)

## கசிப்புடன்...

றுக்கிழமை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மயிலிட்டி வடக்கு பகுதியை சேர்ந்த 37 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதோடு கசிப்பு தயாரிக்க பயன்படுத்தும் பொருட்களும் இதன் போது பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரை விசாரணைகளுக்கு பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7,33)

## பேக்கரி...

துள்ளார்.

எரிபொருள் மற்றும் மின்சார கட்டணம் எதிர்காலத்தில் மீண்டும் அதிகரிக்கப்படும் பட்சத்தில், பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படும்.

தற்போது மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்ட போதிலும், பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை. எனினும், தமது துறை பாரிய நெருக்கடியில் உள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-7)

## கடல் சீற்றம்...

வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மத்திய - மேற்கு வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள குறைந்த காற்றமுக்க தாழ்வு நிலை ஆழ்ந்த காற்றமுக்க தாழ்வு மண்டலமாக உருவாகி அடுத்த 24 மணி நேரத்தில் வங்கதேச கடற்கரை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது காற்றானது 40-45 கி.மீ வேகத்தில் வீசுவதுடன், சில நேரங்களில் 50 - 60 கி.மீற்றர் வேகத்திலும் வீசக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்படுள்ளது. (ந-7)

## ஒழுக்கக்கோவை...

இந்த வரைவை தயாரித்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த வாரம் பாராளுமன்றத்தில் இரண்டு சம்பவங்கள் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பாராளுமன்றத்தில் மரியாதை, ஒழுக்கம் என்ற ஒன்று இல்லையா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, பாராளுமன்றத்தின் ஒழுக்கம் மற்றும் கௌரவத்தை பாதுகாக்கும் வகையில், இங்கிலாந்தின் பாராளுமன்ற நிலைமைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ந-7)

## ஜனாதிபதி...

எடுக்கவுள்ளார்.

ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கோரிக்கைகளின் பிரகாரம், முதலில் பாராளுமன்ற தேர்தலை நடத்த வேண்டும். ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான ஆளும் கட்சியினர் முதலில் ஜனாதிபதித் தேர்தலுக்கு செல்வதே ஆட்சிக்கு சிறந்தது என்ற விடயத்தை முன்வைத்து வலியுறுத்தி வருகின்றனர்.

மறுபுறம் தேர்தல் முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான யோசனை திட்டத்தை நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சரவையில் முன்வைத்துள்ளார். இந்த யோசனை திட்டத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இரத்து செய்தல் மற்றும் பிரதமரை அரசாங்கத்தின் தலைமையாக கொண்ட பாராளுமன்ற ஆட்சி முறைமை உருவாக்குதல் என்பன உள்வாங்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு நிலையில் தேர்தல்முறைமை மாற்றத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்துள்ளதுடன் ஜனாதிபதி தேர்தல் மற்றும்பாராளுமன்ற தேர்தலை ஒத்திவைப்பதற்கான அரசாங்கத்தின் ஜனநாயக விரோத முயற்சிகள் என்று சாடியுள்ளன.

எனவே அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதா?, இல்லையா? என்ற இரட்டை நிலைப்பாடு அரசாங்கத்துக்குள் ஏற்பட்டுள்ளது. இவற்றுக்குத் தீர்வு காணும் வகையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆளும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தர்களை அழைத்து பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளார். (7)

## சரத் வீரசேகர...

மர்வில் பங்கேற்க ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் இந்த இருவரையும் பரிந்துரைத்திருந்தது.

எனினும், விசா நிராகரிக்கப்பட்டதையடுத்து குறித்த இருவரும் அமெரிக்க பயணத்தை இரத்து செய்துள்ளதாக கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவிற்கு எதிரான வழக்கு காரணமாக அமெரிக்க விசா மறுக்கப்பட்டுள்ளதுடன், யுத்த காலத்தில் சரத் வீரசேகரவின் செயற்பாடுகள் தொடர்பிலான குற்றச்சாட்டுக்கள் காரணமாக அவரது விசா மீண்டும் நிராகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்களான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு எதிராக அமெரிக்கா தடைகளை விதித்துள்ளதாக ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (7)




























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7473)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Sri Lankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777

## அமெரிக்க அதிஸ்ட விசா

இன்னும் 11 நாட்களில் நிறைவடைகின்றன

2024 நீங்களும் அமெரிக்காவில்...

இன்னும் 11 நாட்களே உள்ளன.

இந்த வருடம் A/L எழுதியவர்களும் விண்ணப்பிக்கலாம் 0768226244

55000 இலவச விசாக்கள்

V2 Travels க்கு எமது நன்றிகள்.

(C-7472)

V2 TRAVELS 0768226236



## தவறிவிட்டது

கடந்த 17.10.2023 செவ்வாய்க்கிழமை அன்று திருநெல்வேலி சந்தைக்கும் முடமாவடி சந்தைக்கும் இடையில் திறப்பு கொத்துக்களும் கணக்கு கொப்பிகளும் பச்சைநிற வயர் பாக்குடன் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். **சன்மானம் வழங்கப்படும்.** (C-7474)

**077 354 8306**



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 076 097 3127



## VILLAGE HOTEL
### பஸ் சேவை
### JAFFNA EXPRESS

AIRPORT PICK UP DROP SERVICE

வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு

வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு

2800/= (17484)

T.P:077 544 8503



கல்யாண மாலை

## யாழ்ப்பாணத்தில் இயங்கும் கல்யாணமாலை இலவச திருமண சேவை நிறுவனம்
## பதவி வெற்றிடம்

### முகாமையாளர் (இருபாலாரும்)

- வயதெல்லை – 40 இற்கு மேல்.
- அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- யாழ். நகரத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புகளுக்கு

**076 097 3121**



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17555)

076 825 7716 (ஆகாஸ்)



24.10.2023 (விஜயதசமி) புதிய பிரிவுகள் ஆரம்பம்!

## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள்

கேக் வகைகள், ஐசிங், Hair Dressing, Beautician (Facial), மணப்பெண் அலங்காரம், பலவிதமான சேலை அணியும்முறை, Cookery: மேலைத்தேய, கீழைத்தேய உணவுகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள், Ice cream தயாரித்தல் சனி, ஞாயிறு, கிழமை நாள் பிரிவுகள் நடைபெறும்.

(C-7471) 0777110383 0742170383



## பணியாளர் தேவை

- முகாமையாளர்
- விற்பனை பிரதிநிதிகள்
- சிற்றூழியர்கள்

(C-7469)

தொடர்புகளுக்கு

**076 315 6470**



## ஆசிரியர் வெற்றிடம்

வடமராட்சியில் இயங்கும் பிரபல கல்வி நிலையம் ஒன்றிற்கு கணிதம், தமிழ், ஆங்கிலம், வரலாறு(6-11) கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை.

(C-7467) நிர்வாகி

**021 791 7791**
**077 087 2903**



## வாடகைக்கு

ஸ்ரான்லி வீதி, 62/25, பழைய தபாற் கந்தோர் வீதியில் மூன்று மாடிக் கட்டடம் வாடகைக்கு உண்டு. (C-7470)

**076 315 6470**



## கடையுடன் கூடிய வீடு வேண்டும்

மருதனார்மடத்தில் இருந்து யாழ்ப்பாணம் வரையான K.K.S வீதியில் அமைந்த கடையுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு (17554)

**071 856 5422**




## காணி விற்பனைக்கு

யாழ் கைதடி சித்த மெடிசின் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் 1 1/2 பரப்பு காணி உறுதியுடன் விற்பனைக்கு உண்டு. விலைபேசித் தீர்மானிக்கப்படும். A-9 வீதியில் இருந்து 200m கோப்பாய் - கைதடி வீதியில் இருந்து 100m முதலாவது காணி (17554)

**071 856 5422**
**077 111 6739**


## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 04 . 1972

மறைவு 19 . 10 . 2023

## குலவீரசிங்கம் குலராஜன் (றஞ்சன்)

சுதுமலையை பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வதிவிடமாகவும் கொண்ட குலவீரசிங்கம் குலராஜன்(றஞ்சன்) அவர்கள் 19.10.2023 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுகிர்தாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற குலவீரசிங்கம் - பாக்கியலட்சுமி தம்பதியினரின் அன்பு மகனும் மகாதேவன் - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும் சிஜாந்தன், ஐதுரி அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் வேவில், வல்வெட்டியில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 25.10.2023 (புதன்கிழமை) காலை 8.00 மணியளவில் தகனக்கிரியைக்காக ஊறணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வேவில்,
வல்வெட்டி.
077 706 6408

தகவல் :
குடும்பத்தினர்

(17558)


## அகரம் உயர்நிலைக் கல்லூரி
## AHARAM HIGH STANDARD COLLEGE
### காங்கேயன்துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

## அறிவித்தல்

2024ஆம்ஆண்டு தரம் 06இல் கால்பதிக்கவுள்ள மாணாக்கரின் பெற்றோர்களிற்கு,

தங்கள் பிள்ளைகள்ஆரம்பக் கல்வியை நிறைவுசெய்து இடை நிலை வகுப்பிற்கு ஏற்றமடைகின்றார்கள்.

எனவே அவர்களது ஆரம்பம் சிறப்பாக அமையவேண்டும். எனவேதான் அகரம் **விஜயதசமி** நாளை தங்கள் பிள்ளைகளின் இடைநிலைக்கல்வியின் ஆரம்ப நாளாக கொள்கின்றது.

எல்லாக்காலங்களிலும் இவ்வாறு அமைவதில்லை. இம்முறை தங்கள் பிள்ளைகளிற்கு வாய்ப்பாக அமைந்துள்ளது. எனவேதான் இந்நன்னாளில் வகுப்பினை ஆரம்பிக்கின்றோம்.

அன்றைய நாளில் 10.30 இற்கு ஆரம்பிப்பதாகவே அறிவித்திருந்தோம். அது பல பிள்ளைகளிற்கு பொருத்தமான நேரமாக அமையவில்லை. எனவே அந்நாள் வகுப்பினை காலை 06-07 மணிவரை மாற்றியுள்ளோம். ஆகையால் இச் சுபநேரத்தில் தங்கள் பிள்ளைகளை நாள் வகுப்பினில் கலந்து கொள்ளச் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**விசேட குறிப்பு**

பாடசாலைகளில் தரம் 06 வகுப்புக்கள் 2024/02ஆம் மாதத்தில் இருந்தே ஆரம்பிக்கவுள்ளது. ஆனாலும் நாம் முந்தி ஆரம்பிப்பது பொருத்தமான மாணவர்களைத் தெரிவு செய்வதற்காகவே பாடசாலையில் தரம் 06 வகுப்புக்களிற்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கும் காலம் வரையும் எமது நிலையம் அனுமதிக் கட்டணத்தினைத்தவிர மாதக் கட்டணங்கள் எதுவும் அறவிடமாட்டாது என்பதனை அறியத்தருகின்றேன்.

குறிப்பாக ஆங்கில மொழிமூலத்தில் தங்கள் பிள்ளைகளை படிப்பிக்க உள்ள பெற்றோர் இந்த வாய்ப்பினை மிகச் சரியாக பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

ஏன்? எதற்காக என்ற கேள்விகள் உங்களிற்கு எழும் அதற்கான விடைகள் பெற்றோர் சந்திப்பில் இயக்குநரால் அறியத்தரப்படும்.

நாள்வகுப்பு நேரம் இராகவே இருக்கும் ஆனாலும் நல்விடயங்களிற்காக சிரமங்களையும் சிரமமின்றி கடந்து வாருங்கள்.

அகரம் எம் தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்

(17535), (17556) நிர்வாகம்


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.221, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org